# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்

வெள்ளி, நவம்பர் 08, 2019 இதழ் – 82











மக்களின் முடிவு எடுக்கும் போக்கில் ஏற்பட்டுள்ள மாற்றம்!

பக்கம் - 03



கிழக்கின் வழி தனி வழியாக இருக்க வேண்டும்

ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் ஒருவாரகாலமே எஞ்சியிருக்கின்றது.

பக்கம் - 05



சீருடை இன்றி கல்வியை இழக்கும் மாணவர்கள்!

பக்கம் -07



மிக மிக வித்தியாசமான ஓர் அநுபவம் வாசிப்பு மாதமும்

பக்கம் - 10






## கோட்டா ஜனாதிபதியானால் மகிந்த பிரதமர். சஜித் வெற்றிபெற்றால் பிரதமர் நியமனத்தில் இழுபறி!

நி.அமிர்தஸன் ---

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்ததும் அமையவுள்ள புதிய அரசாங்கத்தில் பிரதமர் பதவி தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியை மையப்படுத்திய புதிய ஜனநாயகக் முன்னணிக்குள் குழப்பங்கள் அதிகரித்துள்ளன.

புதிய பிரதமரை பெரும்பான்மை உறுப்பினர்களின் விருப்பத்துக்கு அமைவாகவே நியமிக்க முடியுமென ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச வியாழக்கிழமை மக்களுக்கு விடுத்துள்ள விசேட அறிவிப்பில் கூறியுள்ளார்.

ஆனால் புதிய அரசாங்கத்தில் பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவே நியமிக்கப்பட வேண்டுமென வேட்பாளர் தெரிவுக்கான பேச்சின் போது கலந்துரையாடப்பட்டது. அதனை சஜித் பிரேமதாசவும்




தொடர்ச்சி பக்கம் 15...


## 450ஆவது நாள் போராட்டத்தில் முதற்கட்ட முன்னேற்றம் !



## பொத்துவில் கனகர்கிராம மக்களின் 225 ஏக்கர்காணி நிலஅளவை நேற்று ஆரம்பம்!

காரைதீவு நிருபர் சகா

கடந்த 450 நாட்களாக சத்தியாக்கிரகப் போராட்டத்திலீடுபட்டுவந்த பொத்துவில் 60ஆம் கட்டை கனகர்கிராம தமிழ்மக்களின் காணிகளை நேற்று(7) வியாழக்கிழமை துப்பரவுசெய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதாவது அவர்கள் கடந்த 450 நாட்களாக மேற்கொண்டுவந்த தொடர் போராட்டத்திற்கு முதற்கட்ட வெற்றி கிடைத்துள்ளது.

அம்பாறை மாவட்ட கரையோரத்தின் அக்கரைப்பற்று – பொத்துவில் ஏ4 பிரதான சாலையில் 60ஆம் கட்டை ஊறணி எனுமிடத்தில் கனகர்கிராம தமிழ்மக்களின் காணி மீட்புப்போராட்டம் தொடங்கி நேற்றுடன் 450ஆவது நாளாகிறது.


தொடர்ச்சி பக்கம் 15...


## போட்டியிடும் வேட்பாளர்களின் தேர்தல் செலவுகள்

இலங்கையில் வரவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பிரதான கட்சிகளின் மூன்று வேட்பாளர்களின் செலவீனங்கள் தொடர்பிலான தகவல்களை தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் உத்தியோகப்பூர்வமாக வெளியிட்டது.



இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தேர்தல் கண்காணிப்பு நிலையமான தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் கொழும்பில் நவம்பர் 5 அன்று ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்து, இந்த


தொடர்ச்சி பக்கம் 12 ...



அரங்கம் செய்திகள்

அரங்கம் பத்திரிகையில் விளம்பரம் செய்ய சிறப்புத் தள்ளுபடி!

கால்பக்கம் – ரூபா 2500

அரைப்பக்கம் – ரூபா 5000

முழுப்பக்கம் – ரூபா 10,000

சிறுவிளம்பரங்கள் – ரூபா 200

மாத்திரமே

## வாக்களிப்பு நிலையத்திற்கு செல்ல முடியாத விசேட தேவையுள்ளோருக்கு போக்குவரத்து வசதி

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்காக வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்ல முடியாத உடல் பலவீனமானவர்களுக்கு விசேட போக்குவரத்து வசதிகளை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிக்க வேண்டிய கால எல்லை சனிக்கிழமையுடன் (9) நிறைவு பெறுவதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கான விண்ணப்பத்தை மருத்துவ சான்றிதழுடன், தமது கிராம உத்தியோகத்தரிடம் அல்லது தெரிவத்தாட்சி உத்தியோகத்தரிடம் கையளிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரசியல்வாதிகளும், ஆதரவாளர்களும் தபால்மூல வாக்களிப்பின் பின்னர் குறிப்பிட்ட வேட்பாளர் அமோக வெற்றியை ஈட்டியிருப்பதாகவோ அல்லது பாரிய வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருப்பதாகவோ, வெளியிட்டுவரும் கருத்துக்களில் எதுவித உண்மையும் இல்லை என ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

இவ்வாறு இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களிலும், சமூக ஊடகங்களிலும் பிரசாரம் செய்யப்படுவதாக தகவல் கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ளார். தபால்மூல வாக்குகள் நவம்பர் 16 ஆம் திகதி 5.00 மணியின் பின்னரே எண்ணப்படும். இந்தத் தபால் மூல வாக்குகளை எண்ணி, பெறுபேறுகளை வெளியிடும் வரை எவரும் இவ்வாறான கருத்துக்களை முன்வைக்க முடியாதெனவும் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பில் வருந்துகிறேன்

கினிகத்தேன பொலிஸ் பிரிவில் பொல்பிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படக்கூடும் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பீ திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தான் மிகவும் வருந்துவதாக அவர் தெரிவித்துள்ளார்.

புதனன்று பாராளுமன்ற உறுப்பினர் பயணித்த வாகனத்தை வழிமறித்த குழுவினர் மீது அவரின் பாதுகாப்பிற்கு இருந்த அமைச்சர் பாதுகாப்பு பிரிவின் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் காயமடைந்தனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட கான்ஸ்டபிள்கள் இருவரும் கினிகத்தேன பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட உள்ளனர்.

## ஆசிய கொடுகடன் துணைநிரப்பு நிறுவனங்கள் கூட்டு ஒன்றியத்தின் 32ஆவது வருடாந்த மாநாடு




ஆசிய கொடுகடன் துணைநிரப்பு நிறுவனங்கள் கூட்டு ஒன்றியத்தின் 32ஆவது மாநாடு - 2019 இலங்கை மத்திய வங்கியின் அனுசரணையுடன் கொழும்பிலுள்ள சினமன் லேக்சைட் ஹோட்டலில் 2019 ஒக்டோபர் 28-30 வரை நடைபெற்றது. ஆற்றல் வாய்ந்த கொடுகடன் துணைநிரப்பு முறைமைகளை ஊக்குவித்து விருத்தி செய்யும் குறிக்கோளுடன் ஆசிய கொடுகடன் துணைநிரப்பு நிறுவனங்கள் கூட்டு ஒன்றியம் 1987இல் நிறுவப்பட்டது.

ஆசிய கொடுகடன் துணைநிரப்பு நிறுவனங்கள் கூட்டு ஒன்றியம் என்பது 11 நாடுகளிலிருந்து 16 உறுப்பு நிறுவனங்களை உள்ளடக்குகின்ற சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான பாரிய ஆசிய கூட்டுறவு நிறுவனமாகும். ஆசிய கொடுகடன் துணைநிரப்பு நிறுவனங்கள் கூட்டு ஒன்றியத்தின் நடப்பு உறுப்பு நாடுகளாக இந்தியா, இந்தோனேசியா, யப்பான், கொரியா, மலேசியா, மொங்கோலியா, நேபாளம், பிலிப்பைன்ஸ், இலங்கை, தாய்வான் மற்றும் தாய்லாந்து என்பன அங்கம் வகிக்கின்றன.

ஆசிய கொடுகடன் துணைநிரப்பு நிறுவனங்கள் கூட்டு ஒன்றியத்தின் 32ஆவது மாநாட்டின் தொனிப்பொருளாக 'கொடுகடன் துணைநிரப்பு: நீடித்து நிலைத்திருக்கும் அபிவிருத்தியை நோக்கி' என்பது அமைந்திருந்தது. இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் தேசமான்ய முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி மாநாட்டின் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு முக்கிய உரையினை நிகழ்த்தினார்.

தற்காலக் கொடுகடன் துணைநிரப்பு நோக்கெல்லை மற்றும் அபிவிருத்திகள் பற்றிக் கலந்துரையாடுவதற்கும் இனிவருகின்ற ஆசிய கொடுகடன் துணைநிரப்பு நிறுவனங்களின் கூட்டு ஒன்றிய நிகழ்வுகளுக்கான வழிகாட்டலைத் தயாரிப்பதற்கும் ஆசிய கொடுகடன் துணைநிரப்பு நிறுவனங்களின் கூட்டு ஒன்றிய உறுப்பு நிறுவனங்களின் தலைவர்களின் கூட்டத்துடன் மாநாடு ஆரம்பமானது.

## தெற்கு அதிவேக வீதியின் புதிய பகுதிகள்



தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் இரண்டு புதிய பகுதிகள் வியாழனன்று (07) மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மாத்தறை முதல் மத்தல வரையான பகுதியும், மாத்தறையில் இருந்து ஹம்பாந்தோட்டை வரையான சுமார் 40 கிலோ மீற்றர் கொண்ட பகுதியும் திறக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிஹால் சூரியாரச்சி தெரிவித்துள்ளார்.

நேற்று காலை முதல் இந்த வீதிகள் திறக்கப்பட்டுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

அத்துடன் கடவத்தையில் இருந்து கெரவலபிட்டிய வரை அமைக்கப்பட்டுள்ள சுற்றுவட்ட பாதையும் திறக்கப்பட இருந்தன.

## மட்டு. செய்தியாளர்களைச் சந்தித்த ஐரோப்பிய தேர்தல் கண்காணிப்பாளர்கள்

ஐரோப்பிய தேர்தல் கண்காணிப்பு குழு மட்டக்களப்பு ஊடகவியலாளர்களை சந்தித்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்திற்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவிற்கும் இடையிலான சந்திப்பு ஒன்று வியாழனன்று மட்டு ஊடக அமையத்தில் நடைபெற்றது.

மேற்படி சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறும் தேர்தல் விதிமுறை மீறல்கள், தேர்தல் வன்முறைகள், ஊடகவியலாளர்கள் மீதான அரசியல் கட்சிகளின் அழுத்தங்கள் தொடர்பாக கேட்டறிந்து கொண்டனர்.

## மூன்று வாக்காளர்களுக்கு ஒரு வாக்கெடுப்பு நிலையம்



மட்டக்களப்பு மாவட்டத்தில் மாந்தீவு தொழுநோய் வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்றுவருகின்ற மூன்று பேர்களுக்கான வாக்குச்சீட்டுக்கள் 15ம் திகதி இந்துகல்லூரியின் வழங்கல் பிரிவில் இருந்து எடுத்து சென்று வவுணதீவு வாக்கெடுப்பு நிலையத்தில் இருந்து மறுநாள் மாந்தீவுக்கு எடுத்துச் செல்லப்படும்.

மாந்தீவுக்கு இயந்திரப்படகு மூலமாக வாக்குச் சீட்டுக்கள் எடுத்து செல்லப்பட்டு வழமையான நேரத்துக்கு வாக்களிப்பு ஆரம்பித்து மாலை 5மணிக்கு வாக்கெடுப்பு நிறைவு பெறும் என தெரிவத்தாட்சி அலுவலர் மாணிக்கம் உதயகுமார் தெரிவித்தார்.

அவர், மேலும் குறிப்பிடுகையில் மாவட்டத்தில் மிகவும் வாக்காளர் குறைந்த வாக்கெடுப்பு நிலையமாக இவ் வாக்களிப்பு நிலையம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது என்றார்.

## வங்காள விரிகுடாவில் உருவாகும் சூறாவளி



வங்காள விரிகுடா கடற்பரப்பில் காணப்பட்ட ஆழமான தாழமுக்கம் ஒரு சூறாவளியாக விருத்தியடைந்து வட அகலாங்கு 13.8N இற்கும் கிழக்கு நெடுங்கோடு 89.3 E இற்கும் அருகில் மையம் கொண்டுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் நேற்றுக் காலை வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு பலத்த சூறாவளியாக விருத்தியடைவதுடன் அதற்கு அடுத்த 36 மணித்தியாலங்களில் ஒரு மிகப்பலத்த சூறாவளியாக விருத்தியடைந்து வடக்கு - வடமேற்கு திசையில் பங்களாதேஷ் கரையை நோக்கி நகரக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இது அடுத்த 48 மணித்தியாலங்களில் ஒரு சூறாவளியாக மேலும் விருத்தியடைந்து மேற்கு - வடக்கு திசையில் நகரக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வட அகலாங்கு 13N – 22N இற்கும் கிழக்கு நெடுங்கோடு 85E - 91E இற்கும் இடைப்பட்ட கடற்பரப்புகளில் கடும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை, மிகவும் கொந்தளிப்பான கடல், மிகப் பலத்த காற்று போன்றவற்றிற்கான சாத்தியம் உயர்வாகக் காணப்படுகின்றது.

கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் (குறிப்பாக ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள்) இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

# மக்களின் முடிவு எடுக்கும்ம் போக்கில் ஏற்பட்டுள்ள மாற்றம்!

சீவகன் பூபாலரட்ணம்

இலங்கையின் ஜனாதிபதித்தேர்தல் அடுத்த வாரம் நடக்கவுள்ளது. பலதரப்புப் பிரச்சாரங்களும் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளன.

வழமைபோல தேர்தல் விதிமுறை மீறல்களும் அதிகரித்துள்ளன.

கடந்த தேர்தல்களைப் போல அல்லாதுவிட்டாலும் இந்தத் தடவையும் விதிமுறை மீறல்கள் நடக்காமல் இல்லை.

அவை ஒருபுறம் இருக்க, என்ன விடயத்தை அல்லது பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு வாக்களிப்பது என்பது குறித்து மக்கள் மத்தியில் பல்வேறு விதமான கருத்துக்கள் காணப்படுகின்றன.

இவற்றைவிட அரசியல் கட்சிகள் தம்பாட்டுக்குத் தமக்கு வசதியாக அல்லது தாம் ஆதரிக்கும் வேட்பாளருக்கு வசதியாக பல விடயங்களை முன்வைத்து வருகின்றன.

> இனி தமக்கு ஒரு தீர்வு கிடைக்கும் என்ற எண்ணத்தில் சந்தேகம் தமிழ் மக்களுக்கு வரத்தொடங்கிவிட்டது

தென்பகுதியைப் பொறுத்தவரை நாட்டின் பொருளாதாரமே அவர்களுக்கு தற்போதைக்கு பெரிய விடயமாகப் பார்க்கப்படுகின்றது. பல வருட போரினால் பாதிக்கப்பட்ட தாம், அதன் பின்னரான ஆண்டுகளில் பொருளாதார ரீதியில் என்ன பலன்களை அடைந்திருக்கிறோம் அல்லது அடையவில்லை என்பதே அவர்கள் பிரச்சினை.

போர் முடிந்த பின்னார் அடுத்து வந்த மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் ஓரளவுக்கு சில அடிப்படைக் கட்டுமானங்களில் நாடு வேகமாக முன்னேறியதை தென்பகுதி மக்கள் அறிவர். ஆனாலும் அதனை அடுத்து வந்த தேர்தலில் பொருளாதாரத்தை விட மனித உரிமைகள் விடயம் கொஞ்சம் முக்கிய இடத்தைப் பெற்றது. ஆனாலும் சிங்கள மக்களைப் பொறுத்தவரை அவர்களில் பெரும்பாலானோரின் வாக்குகள் ராஜபக்ஷ அவர்களுக்கே வழங்கப்பட்டன. ஆனாலும், சிறுபான்மை மக்களின் வாக்குகள் மைத்திரிபால அவர்களுக்கு வழங்கப்பட்டதாலும், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டும் அவருக்கு ஆதரவு வழங்கியதாலும் ராஜபக்ஷ தோல்வியடைந்தார்.

> கிழக்குக்குள்ளேயே தமது பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டு புறக்கணிக்கப்படுவதான உணர்வு கிழக்கு மக்கள் மனதில் தலைதூக்கியுள்ளது

ஆனால், அதனையடுத்து ஆட்சிக்கு வந்த மைத்திரிபால மற்றும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் அவ்வளவாகச் சோபிக்கவில்லை. ஆரம்பத்திலேயே ஆட்சியில் இருப்பவர்களுக்கு நெருங்கியவர்கள் சம்பந்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்கள் நாட்டை உலுக்கின. ஊழல் நடவடிக்கைகளே பெரும் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளாக பார்க்கப்படும் அளவுக்கு அவை பாரியனவாக இருந்தன. அதேவேளை மக்களின் தனிப்பட்ட பொருளாதாரமும் மிகுந்த வீழ்ச்சிக்கு உள்ளானது. போரில் இருந்து மீண்டு வந்த நாடு, பொருளாதார ரீதியாக மேலும் பாதாளத்தில் தள்ளப்படுகின்றதோ என்ற உணர்வு மக்களுக்கு ஏற்படத் தொடங்கியது.

உண்மையில் முன்னைய ராஜபக்ஷ ஆட்சியில் செய்யப்பட்ட சில அடிப்படைக் கட்டுமான நடவடிக்கைகளை தொடர்ந்திருந்தாலும் நிலைமை அவ்வளவு மோசமாக மாறியிருக்காது என்று பொருளாதார வல்லுனர்கள் எண்ணத் தொடங்கினர்.

இதனைவிட மைத்திரி - ரணில் அரசாங்கத்தில் இரு தரப்புக்கும் இடையிலான உள்மோதல்கள் பெருமெடுப்பை கண்டன. அதனால் அரசாங்கமே ஒரு ஸ்தம்பிதநிலையை அடையும் அளவுக்கு மோதல்கள் நீதிமன்றம் வரை சென்றன. மக்கள் கதி கலங்கி நின்றனர். அதன் தொடர்ச்சியை இன்றுவரை காணக்கூடியதாக இருக்கின்றது.

இதற்கிடையே, தமிழ் மக்களைப் பொறுத்தவரை "மைத்திரி - ரணில்" ஆட்சியை கொண்டுவருவதில் கடந்த தேர்தலில் அவர்களின் பங்களிப்பு பெரும் அளவாகும். இந்த ஆட்சியில் தமக்குத் தீர்வு கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில் அவர்கள் அந்தப் பங்களிப்பைச் செய்தனர். ஆனால், இழுத்தடித்தே அதனை அந்த அரசாங்கம் இல்லாது செய்துவிட்டது.

ரணில் அரசுக்கு ஒரு பிரச்சினை என்றவுடன் நீதிமன்றத்துக்கு அந்த விடயத்தைக் கொண்டுசென்று அதற்கு அதிவேகமாகத் தீர்வு காண முடிந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சட்டத்தரணிகளாலும் எம்பிக்களாலும் அந்த அரசாங்கத்தைக் கொண்டு தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வையோ அல்லது தீர்வை நோக்கிய முன்னேற்றத்தையோ காண்பிக்க முடியவில்லை. அதோ வருகிறது இதோ வருகிறது என்று கூறி, தாமும் ஏமாந்து மக்களையும் ஏமாற்றிய நிலைக்கு அவர்களைத் தள்ளிவிட்டது.

இவை எல்லாவற்றையும் விட இனி தமிழருக்கு தீர்வு என்று ஒன்று கிடைப்பதற்கு வாய்ப்பே இல்லையோ என்ற அவநம்பிக்கையையும் அவர்களின் நடவடிக்கை தமிழ் மக்கள் மனதில் விதைத்து விட்டது என்றும் சொல்லலாம்.

இந்த நிலையிலேயே இன்றையத் தேர்தல் வந்துள்ளது. ஆனால், தற்போது நிலைமைகளில் பெரும் மாற்றம் தெரியத்தொடங்கியுள்ளது. பெரும்பான்மையின மக்கள் கடந்த ஆட்சியில் பொருளாதாரத்தில் தாம் பாதிக்கப்பட்டதை மனதில் வைத்தே இந்தத் தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்று முடிவை எடுப்பார்கள் என்று தென்னிலங்கை ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இதன் காரணமாக ஏனைய விடயங்களை அவர்கள் பெரிதும் பொருட்படுத்தவில்லை. அதுமாத்திரமன்றி கடந்த காலங்களில், அண்மைய மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும் அவர்கள் ராஜபக்ஷ குடும்பத்தினரையே ஆதரித்து வந்துள்ளனர். அந்த நிலைப்பாட்டில் பெரிய மாற்றத்தைக் காணமுடியாது என்ற கருத்து சில ஆய்வாளர்கள் மத்தியில் இன்னமும் தொடர்கிறது. அது சரியா என்பதை தேர்தல் முடிவுகள்தான் கூறவேண்டும். சிலவேளை கடந்த முறையை விட இந்தத்தடவை அவர்களுக்கு சிங்கள மக்களின் ஆதரவு அதிகரிக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்களின் நடத்தைகளில் சில மாற்றங்களைத் தற்போது காணக்கூடியதாக இருக்கின்றது. இதற்கு பல காரணங்களைக் கூறலாம்.

முதலாவதாக முக்கிய தமிழ் கட்சிகள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் கட்சிகளின் போக்கு இதற்கு காரணமாக கூறப்படுகின்றது. யாருக்கு வாக்களிப்பது என்ற விடயத்தில் சில கட்சிகள் ஆரம்பம் முதலே தம்மை ஏமாற்றுவதாக தமிழ் மக்கள் உணரத் தலைப்பட்டுள்ளனர். வேட்பாளர்களுக்கு சில நிபந்தனைகளை விதித்து, அதனை ஏற்பவர்களுக்கு வாக்களிக்கக்கோருவது என்று அறிவித்துவிட்டு. அவர்கள் எவரும் ஏற்க முடியாத, அல்லது ஏற்க மாட்டார்கள் என்று தாம் அறிந்த நிபந்தனைகளை முன்வைத்து. அவர்கள் அவற்றை நிராகரிக்கவே, தாம் ஏற்கனவே முடிவெடுத்த தமது ஆதரவுக் கட்சியின் வேட்பாளருக்கு வாக்களிக்க அவை இப்போது கோருவதாக தமிழ் மக்கள் எண்ணத் தலைப்பட்டுள்ளனர். இந்தத் தடுமாற்றமான தமிழ்க் கட்சிகளின் போக்கு மக்களை களைப்படையச் செய்துவிட்டது. தமிழ் மக்கள் விரக்தியடைந்த நிலையில் காணப்படுகின்றனர்.

இதன் காரணமாகவே இனி தமக்கு ஒரு தீர்வு கிடைக்கும் என்ற எண்ணத்தில் சந்தேகம் அவர்களுக்கு வரத்தொடங்கிவிட்டது. இது முக்கியமாக தமிழ் மக்களின் வாக்களிக்கும் போக்கில் ஒரு தடுமாற்றத்தை ஏற்படுத்திவிட்டது. அது மாத்திரமன்றி, இந்தத் தமிழ்க் கட்சிகள் தமது நிபந்தனைகளை முன்வைத்த போதே பலரும் இவர்கள் இந்த மாதிரித்தான் ஏமாற்றப் போகிறார்கள் என்று சொல்லத் தொடங்கிவிட்டனர். அதுவே நடந்தும் இருக்கிறது. ஆகவே இந்தத் தமிழ்க் கட்சிகளிடம் எதிர்பார்க்க புதிதாக எதுவும் இல்லை என்ற எண்ணமும் அவர்கள் மனதில் தோன்றத்தொடங்கிவிட்டது.

அடுத்து கிழக்கு மக்களின் போக்கும் இந்தத் தடவை முக்கியமாகப் பார்க்கப்பட வேண்டிய ஒன்றாக மாறியிருக்கிறது. பொதுவாக கிழக்கு தமிழ் மக்களின் எண்ணத்தை, அபிலாஷையை எவரும் கடந்த காலங்களில் பொருட்படுத்தியதே கிடையாது என்பது வரலாறு. அதே போக்கையே இந்தத் தடவையும் தமிழ் கட்சிகள் தொடர்ந்திருக்கின்றன.

ஆனால், இந்த விடயத்தில் அவர்களுக்கு இந்தத்தடவை ஏமாற்றந்தான் மிஞ்சப் போவதாகத் தெரிகிறது. கிழக்கு மக்கள் பொதுவாக வடக்கில் இருந்து தமிழ்க் கட்சிகள் எடுக்கும் முடிவுக்குள் தமது நிலைப்பாட்டை வகுப்பது வழக்கம். இதுவே தமிழ்க் கட்சிகள் தொடர்ந்து கிழக்கைப் பற்றி பெரிய அக்கறை காண்பிக்காது இருந்து வந்தமைக்கு ஒரு காரணம். ஆனால், இந்த தடவை சில மாற்றங்கள் தென்படுகின்றன. கடந்த காலங்களில் கிழக்கு மக்கள் சந்தித்த இழப்புக்களும் பாதிப்புக்களும் அவர்களை சற்று விலகிச் சிந்திக்கச் செய்துள்ளன.

பொதுவான தமிழர் விவகாரத் தீர்வு போன்ற விடயங்களில் கிழக்கு மக்கள் அக்கறையை இழக்காவிடினும், தாம் தொடர்ச்சியாக இந்த விடயத்தில் தமிழ்க் கட்சிகளால் ஏமாற்றப்படுகின்றோம் என்று அவர்கள் எண்ணத்தலைப்பட்டுள்ளனர். அது மாத்திரமன்றி கிழக்குக்குள்ளேயே தமது பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டு புறக்கணிக்கப்படுவதான உணர்வு கிழக்கு மக்கள் மனதில் தலைதூக்கியுள்ளது. அது இல்லை என்று கூறும் அக்கறையோ அல்லது எதிர் வாதம் வைக்கும் திறனோ எவருக்கும் கிடையாது.

ஆகவே, கிழக்கு தமிழரில் கணிசமானோர் இந்தத் தடவை தமது பகுதிக்கான அபிவிருத்தியை மனதில் வைத்தே வாக்களிப்பர் என்று எதிர்பார்க்கலாம்.

இவை எல்லாவற்றையும் விட இன்னுமொரு விடயம் இங்கு நாடு முழுவதும் மக்கள் மனதில் காணப்படுகின்றது. அரசாங்கம் எந்தக் கொள்கை உடையதோ இல்லையோ, முதலில் அது ஸ்திரத் தன்மை உடையதாக இருக்க வேண்டும் என்பதே அது. என்ன பேசினாலும், எதனைத் திட்டமிட்டாலும் அதனைச் செய்ய அரசாங்கம் உறுதியானதாக இருக்க வேண்டும். ஜனாதிபதி ஒரு பக்கமும் பிரதமர் ஒரு பக்கமும் இழுக்கும் நிலை இருக்கக்கூடாது. அல்லது யார் பிரதமர் என்ற சந்தேகம் இருக்ககூடாது. ஸ்திரமான ஒரு ஆட்சி தேவை. அதுவே நாட்டு மக்கள் அனைவரினதும் எதிர்பார்ப்பாகவும் இருக்கிறது. அதனை யார் கொடுப்பார்கள் என்பதே மக்களின் தெரிவாகவும் இருக்கும் என்று நம்பலாம்.




# கிழக்குத் தமிழர்களின் இருப்பை தீர்மானிக்கும் சனாதிபதித் தேர்தல்

கடந்தகால சனாதிபதித் தேர்தல்களில் எல்லாம் தமிழ் மக்கள் கடும் சிங்கள பேரினவாத வேட்பாளர் என்று தாம் கருதுபவரை ஒதுக்கி அவருக்கு மாற்றாக இவர் வந்தால் தமிழர்களுடைய பிரச்சினைகளை தீர்த்துவைப்பார் அல்லது சாதகமாக அணுகுவார் என்ற நம்பிக்கையிலும் அவர்களால் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக தேர்தல் விஞ்ஞாபனங்களில் கூறப்பட்ட விடயத்தில் உள்ள நம்பிக்கையிலுமே வாக்களித்து வந்துள்ளனர். தமிழர்களின் வாக்குகளினால் வெற்றியீட்டி சனாதிபதியாகிய மறுகணமே அவர்கள் எல்லோரும் பௌத்த தேரர்களின் ஆசீர்வாதத்தினைப் பெற்று அவர்களிடம் சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கு எந்தப் பங்கமும் இல்லாமல் ஆட்சிபுரிவேன் என உறுதியளித்து தமிழர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளையும் தங்களால் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனங்களையும் மறந்து பௌத்த தேரர்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைய ஆட்சி புரிவதில்தான் கவனம் செலுத்தி வந்துள்ளனர்.

மேற்படி அனுபவத்திலிருந்துதான் இம்முறை சனாதிபதித் தேர்தலை தமிழர்கள் நோக்க வேண்டும். ஆனால் பல்கலைக் கழக மாணவர்களின் ஏற்பாட்டில் கூடிய தமிழ் கட்சிகள், தமிழ் மக்கள் பற்றியோ அல்லது சமகால அரசியல் சூழல் குறித்தோ கவனம் செலுத்தாது, எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் அரசியலுக்கு இதனை எவ்வாறு பயன்படுத்தலாம் என்றே சிந்தித்துள்ளார்கள். அதாவது 13 அம்சக்; கோரிக்கைகள் நடைமுறைச் சாத்தியமற்றவைகள் என்று தெரிந்திருந்தும் தாங்கள் தமிழ் மக்களின் இந்த இலட்சியங்களை ஒரு போதும் விட்டுக்கொடுக்கப் போவதில்லை என்பதை தமிழ் மக்களுக்குக் காட்டி அதன் அரசியல் இலாபங்களை தாம் பெற்றுக்கொள்ளவதற்கான ஒரு சந்தர்ப்பமாக பல்கலைக் கழக மாணவ பிரதிநிதிகளினால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தினையும் கோரிக்கைகளையும் பயன்படுத்தியுள்ளார்கள் என்பதில் எவ்வித சந்தேகங்களும் சுயமாகச் சிந்திப்பவர்களுக்கு இருக்க முடியாது.

மக்களை ஏமாற்றுவதில் நீண்ட கால அனுபவம் பெற்றவர்களான அத்தலைவர்களுக்கு, அவர்களுடைய அரசியல் அனுபவ வயதும் இல்லாத பல்கலைக்கழக மாணவ பிரதிநிதிகளைப் பயன்படுத்தவதில் எந்தவொரு சிக்கலும் இருக்கவில்லை என்பதே உண்மையாகும். ஏனெனில் தங்களுடைய 13 அம்சக் கோரிக்கைகளை சனாதிபதித் தேர்தலின் பிரதான மூன்று வேட்பாளர்களும் ஏற்காதநிலையில் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதற்காக இரண்டு நாட்கள் கூடிப் பேசியும் ஐந்து கட்சிகளும் ஒரு பொது முடிவுக்கு வரமுடியாமல் போய்விட்டதிலிருந்து இது புலனாகின்றது. அதாவது 13 அம்சக் கோரிக்கைகளில் பொது உடன்பாட்டுக்கு வந்தவர்களால் 13 அம்சக் கோரிக்கைகளும் நிராகரிக்கப்படுகின்றபோது என்ன செய்ய வேண்டும் என்பதில் பொது முடிவுக்கு வரமுடியாமைக்குக் காரணம் ஐந்து கட்சிகளுக்கான பொது நிகழ்ச்சித் திட்டமின்றி தாங்கள் தாங்கள் தங்களுடைய நலனை முன்னிலைப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்துடன் இருந்தமையினாலாகும்.

ஐந்து கட்சிகளாலே பொது நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படையில் செயற்பட முடியாத நிலையில் இலட்சக்கணக்கான சிங்கள பேரினவாதிகளையும் பல சிங்கள அடிப்படைவாதக் கட்சிகளைக் கூட்டாகக் கொண்டிருக்கின்ற வேட்பாளர்களால் மட்டும் எவ்வாறு 13 அம்சக் கோரிக்கைகள் தொடர்பாக பொது உடன்பாட்டுக்கு வரமுடியும் என்பதை தமிழ் மக்கள் முதலில் உணர வேண்டும். இதன் அர்த்தம் எமது கோரிக்கைகள், உரிமைகள் தொடர்பாக எதுவும் பேசாதிருப்பது அன்று. அவைகள் போதிய ராஜதந்திரத்துடன் அணுகப்பட வேண்டும். தமிழில் ஒரு பழ மொழி இருக்கிறது 'சிலுசிலுப்புத் தேவையில்லை பலகாரம்தான் தேவை' என்று, அது போல் கோரிக்கைகளை முன்வைத்து கோசம் எழுப்புவதல்ல முக்கியம். அந்தக் கோரிக்கைகளை காதோடு காதாக எவ்வாறு வென்றெடுக்க வேண்டும் என்பதே முக்கியமாகும். அதை விடுத்து சிங்கள மக்களை கோபமூட்டி தமிழ் மக்களை உசுப்பேற்றி நடாத்தப்படும் அரசியல் நாடகங்களால் தமிழ் மக்களுக்கு எந்தப் பயனும் கிட்டப்போவதில்லை என்பதை கடந்த எழுபது வருடமாக தமிழ் மக்கள் உணர்வதாகத் தெரியவில்லை. இந்த உணர்வு ஏற்படுமாக இருந்தால் தமிழ் மக்களையும் அவர்களுடைய உணர்வுகளையும் விற்றுப் பிழைக்கும் இன்றைய தமிழ் அரசியல் ஜாம்பவான்கள் பலர் தங்கள் முகவரியை இழந்து விடுவர். எனவே அதனைத் தக்கவைத்துக் கொள்வதற்காக இவ்வாறான அரசியல் நாடகங்களை ஆடி தமிழர்களை விற்பனைப் பண்டமாக்குதவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை.

**தமிழ் தேசியக் கட்சிகளிடம் ஏமாந்த பல்கலைக்கழக மாணவர்கள்**

எந்தவொரு கட்சியும் தங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடுவதற்கு முன்பே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தெரிவு சஜித் என்பதை பலரும் நன்கு அறிந்திருந்தார்கள் இடையில் நடந்த 13 அம்சக் கோரிக்கைகள் இழுத்தடிப்புக்கள், தேர்தல் விஞ்ஞாபனம் வந்தபின்பு ஒப்பீட்டு ரீதியாக சஜித் பிரமதாவினுடைய தேர்தல் விஞ்ஞாபனம் சிறந்தது எனவே தமிழ் மக்கள் அவருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதெல்லாம் வெறும் அரசியல் நாடகங்களாகும்.

தங்களுடைய சுய விருப்புத் தேர்வுக்கான நியாயப்பாட்டுக்கு தேர்தல் விஞ்ஞாபனத்தை ஒரு சட்ட ஆவணமாக தமிழ் மக்களுக்கு காட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயல்கிறது. அந்தளவுக்கு நம்பிக்கை வைக்குமளவுக்கு தேர்தல் விஞ்ஞாபனம் சட்ட வலுவைப் பெற்றிருக்குமாயின் மைத்திரியின் தேர்தல் விஞ்ஞானத்தில் கூறப்பட்ட விடயங்களில் எத்தனை சதவிகிதம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை எடுத்துக்காட்டி நிறைவேற்றப்படாமல் விடப்பட்டவைகளுக்காக தங்களுடைய சட்ட அறிவைப் பயன்படுத்தி இதுவரை நியாயம் வேண்டி நீதிமன்றம் செல்லாதிருப்பதன் காரணத்தை முன்வைப்பார்களா? அல்லது பாராளுமன்றத் தேர்தல்களில் தங்களால் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனங்களில் கூறப்பட்டுள்ளவற்றில் எந்தளவுக்கு அவற்றை அவர்கள் அமுல்ப்படுத்தினார்கள் என்று ஒரு பட்டியலை வெளியிட்டு தங்களுடைய நேர்மைத் தன்மையினை மக்களுக்கு முன்வைக்கத்தான் முடியுமா?

**கிழக்குத் தமிழரின் பிரச்சினைகளை புறக்கணிக்கும் தமிழ் தேசியப் பத்திரிகைகள் மற்றும் அவற்றின் பத்தி எழுத்தாளர்கள்**

தேர்தல்கள் முடிந்த கையுடன் அரசியல் கட்சிகளும் சரி, மக்களும் சரி இந்த தேர்தல் விஞ்ஞாபனம் எனும் விடயத்தை மறந்து போய்விடுபவர்களாகத்தான் இருக்கிறார்கள். சரி மக்கள் மறக்கத்தான் இல்லை என்றால்கூட தேர்தல் முடிந்து வெற்றியீட்டி அரசாங்கம் அமைத்ததன் பின்னர்

எழுவான் வேலன்

தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ள விடயங்கள் அமுல்படுத்பப்படவில்லை என்று எவராவது வழக்குத் தொடர்ந்து அவற்றை அமுல்படுத்துவதற்குரிய நீதிமன்ற ஆணையைப் பெற்றுக்கொள்ளத்தான் முடியுமா? இவை எவற்றையுமே செய்ய முடியாதிருக்கும் நிலையில் மக்களை தேர்தல்காலங்களில் கனவுலக வாழ்க்கையில் வைத்திருக்கும் கற்பனைப் படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழ் மக்கள் இன்னாருக்கு வாக்களியுங்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களைக் கோருவது என்பது அரசியல் அயோக்கியத்தனமே தவிர வேறில்லை.

இவ்வாறு மக்களை ஏமாற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு உரிய காலத்தில் தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தவில்லை என்றும் மக்களை நட்டாற்றில் விட்டுவிட்டார்கள் என்றும் இலங்கையின் தமிழ்த் தேசியப் பத்திரிகைகளும் அவற்றின் பத்தி எழுத்தாளர்களும் தங்களுடைய ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

பத்திரிகைத் தர்மம், நடுநிலமை, பத்திரிகைச் சுதந்திரம் பற்றியெல்லாம் பேசும் இவர்கள் வடகிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று ஒரு கட்சி மட்டும்தான் தமிழர்களுக்கு இருக்கின்றது என்ற மனநிலையில் நின்று கொண்டு எழுதிவருவதை அவதானிக்க முடிகின்றது. வடக்கில் சி.வி. விக்கினேஸ்வரன் தலைமையிலான கட்சி, சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான கட்சி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலன கட்சி போன்றவற்றை ஓரளவு பொருட்படுத்தினாலும் கிழக்கில் உள்ள தமிழ் கட்சிகளை கிஞ்சித்துத்தானும் பொருட்படுத்துவதில்லை. அவற்றை கட்சிகளாகக் கூடப் பார்ப்பதில்லை. மறந்துதானும் தங்களுடைய எழுத்துக்களில் அவை வந்தவிடக் கூடாது என்பதில் மிகக் கவனமாக உள்ளனர். ஏனெனில் கிழக்கில் உள்ள கட்சிகள் அனைத்தும் துரோகிகளின் அடையாளச் சின்னமாக இவர்களால் பார்க்கப்படுகின்றன. இதன் காரணமாக கிழக்கு மக்களின் பிரத்தியேகமான அரசியல் சூழல் அதற்கேற்ற அரசியல் அணுகுமுறை பற்றி எவ்வளவுதான் இந்தக் கட்சிகள் தங்களுடைய கருத்துக்களை முன்வைத்தாலும் அவை இந்த தமிழ்த் தேசியப் பத்திரிகைகளுக்கும் அவற்றின் பத்தி எழுத்தாளர்களுக்கும் விளங்குவதில்லை. இதுதான் எமது தமிழ்த் தேசியமாக இருக்கின்றது.

இம்முறை சனாதிபதித் தேர்தல் தொடர்பாக கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தவிர்ந்த எனைய 11 தமிழ் கட்சிகள் பொதுசன பெரமுன கட்சியின் வேட்பாளர் கோதபாய ராஜபக்சவை ஆதரிப்பது என்ற முடிவை எடுத்து ஊடகங்களுக்கும் மக்களுக்கும் தெளிவுபடுத்தியிருந்தன. ஆனால் எமது அரசியல் ஆய்வாளர்களுக்கு இவையெல்லாம் அரசியலாகத் தெரிவதில்லை. அவர்களுக்குத் தெரிவதெல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன சொல்லப் போகின்றது அல்லது ஏன் காலம் தாழ்த்துகின்றது என்கின்ற ஆராச்சி மட்டுமேயாகும்.

இதுபோன்றுதான் பல்கலைக் கழக மாணவர்களின் ஏற்பாட்டில் கூடிய அரசியல் கட்சிகள் அனைத்தும் யாழ் தலைமைத்துவத்தைக் கொண்ட கட்சிகளேயாகும். கிழக்கில் இருக்கின்ற எந்த ஒரு அரசியல் கட்சிக்குத்தானும் அழைப்பு விடுத்ததாக அறியமுடியவில்லை. கிழக்கு மக்களின் அரசியல் பிரச்சினைகளை அந்த மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சித் தலைவர்கள் பேசாது

தொடர்ச்சி(15)ஆம் பக்கம்

# கிழக்கின் வழி தனி வழியாக இருக்க வேண்டும்



ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் ஒருவாரகாலமே எஞ்சியிருக்கின்றது.

தேசத்துக் குடிமக்கள் அனைவரும் அடுத்த அரச தலைவரை தெரிவு செய்வதற்காக ஒரு திடமான முடிவை எடுக்க வேண்டிய தருணங்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன.


> இனியொரு விதி செய்வோம்

அரசியல் மேதாவிகள் தேசியம், சுயநிர்ணயம், தாயகம் என்று கற்பனை குதிரைகளை

**அறுமுகுட்டிபோடி**

பறக்க விட்டுக்கொண்டிருக்கின்றனர்.

அவரவர் வாழும் சூழலும் அதையொட்டிய தேவைகளுமே சிந்தனைகளைத்




நாட்டு மக்கள் அனைவரும் தத்தமது இனம் சார்ந்தும் பிரதேசம் சார்ந்தும் சூழலுக்கு ஏற்றாற்போல் வெவ்வேறு விதமாக சிந்தித்து முடிவு எடுத்து வருகின்றனர். வெளிநாடுகளிலும் குறிப்பாக ஐரோப்பிய தேசங்களிலும் வாழும்

தீர்மானிக்கின்றன. எனவே இத்தேர்தல் குறித்த எமது சிந்தனைகள் கிழக்கில் வாழும் தமிழர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களை தீர்த்துக்கொள்ளும் வழிவகைகளை நோக்கியதாக இருக்க வேண்டும். எமது கள யதார்த்தத்தில் இருந்து நாம் சார்பு நிலையை தீர்மானிக்க வேண்டும்.

> கொழும்பு கறுவாத்தோட்டத்து மாளிகைகளில் இருந்தோ யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்குள் இருந்தோ புலம்பெயர் தேசங்களில் இருந்தோ கிழக்கு மண்ணின் அரசியலை யாரும் தீர்மானிக்க முடியாது.

கொழும்பு கறுவாத்தோட்டத்து மாளிகைகளில் இருந்தோ யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்குள் இருந்தோ புலம்பெயர் தேசங்களில் இருந்தோ கிழக்கு மண்ணின் அரசியலை யாரும் தீர்மானிக்க முடியாது.

இந்த நல்லாட்சி அரசாங்கம் வந்ததன் பயனாக இலாபமடைந்தவர்கள் குறிப்பாக மலையக தமிழ் மக்கள் ஆகும். இந்த ஆட்சியில் நிலவுரிமையை பெற்றுக்கொண்டு வீட்டு வசதிகளை பெற்று வருகின்றனர். வெறும் ஏழு பாராளுமன்ற உறுப்பினர்களை வைத்துள்ள தமிழ் முற்போக்கு கூட்டணி இராஜாங்க அமைச்சராக ஒருவரையும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் மூவரையும் கொண்டுள்ளது. அதனால்தான் அவர்களால் மலையகத்தில் ஐந்து புதிய பிரதேச சபைகளை உருவாக்க முடிந்தது. அதனை வைத்துக்கொண்டு அவர்கள் எடுக்கின்ற சார்புநிலைக்கு நியாயம் உண்டு.



அதேபோல எமது சகோதர முஸ்லீம் இனம் சார்ந்த இரு பெரும் கட்சிகள் இந்த ஆட்சியில் ஊருக்கொரு குறுநில மன்னர்கள் போன்று அமைச்சர்களாக உள்ளனர். அதனால் அவர்கள் தமது மக்களுக்கு எத்தனையோ விதமான அரிய சேவைகளை வழங்கி வருகின்றனர். அவர்கள் எடுக்கின்ற சார்பு நிலைக்கும் நியாயம் இல்லாமலில்லை.

ஆனால் கிழக்கு தமிழர்களை பொறுத்தவரையில் இத்தகைய ஒரு சாதகமான அணுகு முறைகளூடாக எமது சார்பு நிலையை எடுக்கமுடியாத துரதிஷ்டம் கொண்டவர்களாகவுள்ளோம். ஆனால் எமக்கு பாதகம் எது என்பது தெரிந்தால் அதிலிருந்து எமது சார்புநிலையை தீர்மானிக்க முடியும்.

அரசாங்கத்துக்கு உளவு தகவல் அறிவிக்கப்பட்டும் அதை பொறுப்புடன் அணுகாத காரணத்தால் ஈஸ்ட்டர் குண்டுவெடிப்பில் எமது சகோதரர்கள் இரத்த வெள்ளத்தில் மூழ்கி கிடக்க நேரிட்டதே அதை மனதில் கொண்டு இத்தேர்தலில் எமது சார்பு நிலையை நாம் தீர்மானிக்க முடியும். புனித சீயோன் தேவாலயத்தில் இரத்த வெள்ளத்தில் கிடந்த எமது குழந்தைகளின் உயிர் போல எதிர்காலத்தில் எந்த குழந்தைகளின் உயிரும் காவுகொள்ளப் படக்கூடாது என்பதை மனதில் கொண்டு இத்தேர்தலில் எமது சார்பு நிலையை நாம் தீர்மானிக்க முடியும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பில் 16 பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டுள்ளபோதிலும் கல்முனை உப செயலகத்தை தரமுயர்த்துவதற்காக ஊரைக்கூட்டி, உலகை கூட்டி ஒப்பாரி வைக்கவேண்டியுள்ளதே அந்த கையறு நிலையிலிருந்து எமது சார்பு நிலைக்கான நியாயங்களை நாம் தேட வேண்டும்.

இந்த அரசாங்கத்தில் 84 அமைச்சர்கள் இருக்கின்றனர். அமைச்சரவை அந்தஸ்துள்ள 45 அமைச்சர்களும், 19 இராஜாங்க அமைச்சர்களும், 20 பிரதியமைச்சர்களும் இதில் அடங்குவர். மலையகத்துக்கு அமைச்சர்கள் உண்டு, முஸ்லிம்களுக்கு அமைச்சர்கள் உண்டு, வடக்கு தமிழர்களுக்கு அமைச்சர்கள் உண்டு. ஆனால் கிழக்கு தமிழனை பிரதிநிதித்துவம் செய்ய ஒரு அமைச்சர்கூட இல்லாத வேதனையை மனதில் கொண்டு எமது சார்பு நிலையை நாம் தீர்மானிக்க வேண்டும்.

வாகரை இல்மனைட் கம்பெனியால் எமது வளங்கள் காவுகொள்ளப்படுகின்றதே என்று தொண்டை கிழிய ஆர்ப்பாட்டம் பண்ணியும் அதையிட்டு கவலைகொள்ளாத அரசாங்கத்தை மனதில் வைத்து எமது சார்பு நிலையை நாம் தீர்மானிக்க வேண்டும்.

மட்டக்களப்பு பொது நூலக கட்டட நிர்மாணப் பணிகளை கைவிட்டு நான்கு ஆண்டுகளாக கண்டும் காணாது கல்நெஞ்சுடன் கடந்து சென்ற கயவர்களை மனதில் கொண்டும் யார்வருவார் அதை கட்டிமுடிக்க? என்பதை மனதில் நிறுத்தியும் எமது சார்பு நிலையை நாம் தீர்மானிக்க வேண்டும்.

வேலை வாய்ப்பிலும், நிதி ஒதுக்கீட்டிலும் தமிழர்களுக்கு பரபட்சம் இன்றி நடந்து கொள்ள எத்தகைய தலைமைகள் அதிகாரத்துக்கு வரவேண்டும் என்பதை எண்ணிப் பார்த்து இந்த ஜனாதிபதி தேர்தலில் நாம் எமது சார்பு நிலையை தீர்மானிக்க வேண்டும்.

ஆகவே கிழக்கின் முடிவும் அதன் வழியும் இந்த மண்ணின் வேதனைகளிலிருந்தும் சோதனைகளிலிருந்தும் எடுக்கப்படவேண்டும்.

அதுவே எமக்கான தனி வழியாக இருக்க வேண்டும்.

# சொல்லத் துணிந்தேன்! 25

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தங்களது நிலைப்பாட்டை அதாவது எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்பதை அறிவிப்பதை தங்களது வழமையான பாணியில் இறுதிவரை இழுத்தடித்துவந்த தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தபால் மூல வாக்களிப்பு நேரத்தில். எந்த வேட்பாளரையும் ஆதரிப்பதில்லை என்று முடிவெடுத்திருந்தது. ஆனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் முடிவுகளை எடுக்க அனுமதிக்கப்பட்டிருந்தார்கள்.

இப்போது என்னவென்றால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் ஆதிக்கம் செலுத்தும் பிரதான பங்காளிக்கட்சியான தமிழரசுக்கட்சி சஜித்பிரேமதாசாவை ஆதரிக்க முடிவெடுத்துள்ளது. இது உண்மையிலேயே தமிழ் மக்களை இன்னும் இன்னும் முட்டாள்களாக்கி ஏமாற்றும் அரசியல் கேலிக்கூத்துகளிலொன்றாகும்.



தபால்மூல வாக்களிப்புத் தினம்வரை முடிவெடுக்கவில்லையெனத் தலைமைப்பீடம் அறிக்கை விட்டுக்கொண்டிருக்க தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ச தலைமையிலான 'ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன' கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான கோட்டாபயராஜபக்சவை ஆதரிக்க முடிவெடுத்த தமிழ்க்கட்சிகளைத் திட்டித் தீர்த்துக் கொண்டு புதிய ஜனநாயக முன்னணி வேட்பாளரான ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த சஜித்பிரேமதாசாவை ஆதரித்து அறிக்கையிடுதலிலும் மேடைகளில் பேசுவதிலும் ஈடுபட்டிருந்தனர்.

'இதனை என்னவென்று நடுநிலை என்பது. பாராளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாகத் தங்கள் முடிவுகளை எடுக்க அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் என்றால் கட்சியின் முடிவு - அந்த முடிவுக்குக் கட்டுப்பட வேண்டிய கடப்பாடு என்ற விடயங்கள் இல்லாமற் போய்விட்டனவா? சுளை சுளையாகப் பணம் பெற்றுக் கொண்டு வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்பும் 'பிரயாண முகவர்' மற்றும் 'வேலைவாய்ப்பு முகவர்' களைப் போன்று தங்களுக்கு வேண்டியவர்களுக்கு அரசியல் பதவிகளைப் பெற்றுக் கொடுக்கும் 'அரசியல் முகவர்' ஆகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மாறிவிட்டதா? அப்படியானால் மகாகவி பாரதியாரின் வார்த்தைகளிலே கூறப்போனால் 'சீச்சீ'! கெட்டநாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு' தானே இது.

இந்த நாட்டின் முக்கியமான அரசியல் நிகழ்வொன்றில் ஓர் உறுதியான – தெளிவான நிலைப்பாட்டை எடுக்க முடியாமல் தடுமாறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சமூகப் பொறுப்புடைய அரசியற் கட்சியாகத் தமிழ் மக்கள் கருத முடியுமா? தாங்கள் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற மக்களுக்கு ஓர் உறுதியான – தெளிவான அறிவுறுத்தலை வழங்க முடியாத தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் அதன் பங்காளிக் கட்சிகளும் தங்கள் கட்சிகளைக் கலைத்துவிட்டு 'அரசியல் துறவறம்' பூணுவது அத்தகைய சந்தர்ப்பவாத அரசியலைவிடப் பல மடங்கு தமிழ் மக்களுக்கு நன்மை தரக் கூடியது.

1 ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த சஜித்பிரேமதாசாவை ஆதரிக்கச் சொன்னால் தமிழ் மக்கள் அதனைக் கேட்கமாட்டார்கள். அவர்கள் கோட்டாபயராஜபக்சவுக்குப் பெரும்பான்மையாக வாக்களித்துவிட்டால் தாங்கள் 'கூழ்ப்பட்டம்' கட்டவேண்டிவரும் என்றதொரு பயமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இருக்கும் அதேவேளை தாங்கள் சஜித்பிரேமதாசாவைப் பகிரங்கமாக ஆதரித்தால் அதனை வைத்துக் கொண்டே சிங்களப் பெரும்பான்மையினர் கோட்டாபயவை ஆதரித்துவிட்டால் அதனைத் தடுப்பதற்கான அல்லது குறைப்பதற்கான தந்திரமாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த 'மதில்மேல் பூனை' நிலைப்பாட்டை நோக்க இடமுண்டு. எது எப்படியிருப்பினும் இது கடைந்தெடுத்த அரசியல் சந்தர்ப்பவாதம் என்பதில் மறுப்பதற்கில்லை.

சிலவேளைகளில் ஜனாதிபதி வேட்பாளராகப் பிரதமர் ரணில்விக்கிரமசிங்க களம் இறங்கியிருந்தால் அவரைப் பகிரங்கமாக ஆதரிக்கும் நிலைப்பாட்டைச் சம்மந்தன் - சுமந்திரன் கூட்டு ஆரம்பத்திலேயே



**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

எடுத்திருக்கலாம். ஏனெனில் ரணில் விக்கிரமசிங்கவுடன்தானே அவர்களுக்கு 'வாலாயம்' மற்றும் 'வாரப்பாடு' உண்டு. சஜித்பிரேமதாசவுடன் அவ்வளவு நெருக்கமும் உறவும் இல்லைத்தானே. அதனால்தான் இத்தகைய ஏனோ? தானோ என்ற மனப்போக்கோ தெரியவில்லை. உள்ளூர சஜித்பிரேமதாச மீதுள்ள நம்பிக்கையை விடக் கோட்டாபயராஜபக்சதான் நடைமுறையில் ஏதாவது செய்யக் கூடியவர் என்ற யதார்த்தத்தை உணர்ந்துகொண்டிருக்கிறார்களோ தெரியவில்லை. மட்டுமல்லாமல் கோட்டாபய ராஜபக்சதான் வெல்லப் போகிறார் என்பதைச் சந்தேகத்திற்கு இடமின்றி அறிந்து கொண்டுவிட்டார்கள் போலவும்படுகிறது. எது எப்படியிருப்பினும் யாரை ஆதரிக்கிறார்கள் என்பதைப் பகிரங்கமாக அறிவிப்பதுதானே அரசியல் நேர்மை. அன்றியும் வெற்றிபெறும் வேட்பாளரின் வெற்றியில் கணிசமான பங்கினை வகித்தால்தானே அவரிடமிருந்து பின்னர் சமூக, பொருளாதார, அரசியல் அனுகூலங்களை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கவும் முடியும். இதனை மக்கள் நலநாட்டத்துடனும் -

தொடர்ச்சி(15)ஆம் பக்கம்

# 'தமிழர்களின் இருப்பைக் காக்க ஒன்றிணைவோம்'

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் கிழக்குத் தமிழர்கள் யாருக்கு வாக்களிப்பது என்கின்ற தீர்மானத்தினை எப்போதோ எடுத்துவிட்டார்கள் என கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், தமிழ் விடுதலைப் புலிகளின் பொதுச் செயலாளருமான பூ.பிரசாந்தன் குறிப்பிட்டார்.

பட்டிருப்பு தொகுதியின் சங்கர்புரம் கிராமத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

--- தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச்செயலாளர்

'கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்படுகின்ற நிலங்கள் மற்றும் நிர்வாகத்தினை மீட்பதற்கும் பொருளாதார ரீதியாக தமிழர்கள் வலுவாகுவதற்கும் அரசியல் அதிகாரம் என்பது இன்றியமையாதது.


அந்த வகையில் வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழர்கள் தங்களது இருப்பை பாதுகாத்துக் கொள்ள வேண்டுமாக இருந்தால் அனைவரும் ஒன்றிணைந்து ஒரே குடையின்கீழ் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கோட்டபாய ராஜபக்ஷவின் மொட்டு சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும்.

பொருளாதார ரீதியாக நலிவடைந்து இருக்கின்ற தமிழ் சமூகம் இன்று அரசியலையும் கல்வி கலை கலாசாரம் பொருளாதாரம் என்கின்ற எந்த துறைகளிலும் நாட்டம் இல்லாமல் இருப்பதற்கு காரணம் எங்களிடம் நிலையான பொருளாதார கொள்கை இல்லாமலிருப்பது. ஆகவே நிலையான பொருளாதார கொள்கையை பெற்றுக்கொள்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடவேண்டும்.

அரசியல் பசப்பு வார்த்தைகளாலும் வீர பேச்சுக்களாலும் தமிழர்களுக்கு என்றும் நியாயமான தீர்வு கிடைக்கப்போவதில்லை என்பதை கடந்த கால அரசியல் உணர்த்தி இருக்கின்றது அன்று ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி காலத்தில் இருக்கின்ற போது எதிர்க்கட்சித் தலைவராக அமிர்தலிங்கம் இருந்தார். அந்த காலத்திலேயே தமிழருக்கு எதிரான அதி கூடுதலான குழப்பங்களும் வன்முறைகளும் தீர்மானங்களும் கொண்டுவரப்பட்டது அதுபோன்று ஐக்கிய தேசியக் கட்சி நல்லாட்சி அரசாங்கத்தில் எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தன் இருக்கின்ற போது கிழக்கில் தமிழர்களுக்கான நில நிர்வாகம் இருப்புக்கள் மறுக்கப்பட்டது. கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சர் பதவி கூட ஏனைய சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்தச் சூழல் தொடர்ந்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்குவதால் தமிழருக்கு எதனைப் பெற்றுக்கொடுக்க முனைகின்றார்கள் என்கின்ற கேள்வி மக்களிடையே இருக்கின்றது.

வடக்கின் அரசியல் சூழல் வேறு கிழக்கில் அரசியல் சூழல் வேறு இவ்வாறு தொடர்ந்து செல்லுமாக இருந்தால் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் அடையாளம் மறுக்கப்பட்டு தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்ற எச்சங்கள் மாத்திரமே எஞ்சி இருக்கின்ற சூழலை தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்க முயலுகின்றதா? தமிழ் தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மக்களை நேசிக்குமாகவிருந்தால் உண்மையில் இந்த தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷவை ஆதரித்து இருக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி(15)ஆம் பக்கம்




# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
" அலையப்போடி நல்லரெத்தினம் (ஸ்தாபகர்)
அறிவாலயம் அறக்கட்டளை நிதியம்
பண்டாரியாவெளி கொக்கட்டிச்சோலை "

## சீருடை இன்றி கல்வியை இழக்கும் மாணவர்கள்!

## நல்மனம் படைத்தவர்கள் உதவ முன்வருவார்களா?

**படுவான் பாலகன்**

அங்கு உதவி செய்யிறாங்க, இங்க உதவி செய்யிறாங்க என பேசிக்கொள்கின்றார்கள்தான். ஆனால் படுவான்கரைப்பகுதியில் இன்னமும் எவ்வளவோ அபிவிருத்திகள் செய்ய வேண்டியிருக்கின்றன. படுவான்கரையில் இப்போது செய்யப்படுகின்ற அபிவிருத்தியின் வேகத்தினை பார்த்தால் இன்னும் ஐம்பது வருடங்கள் சென்றாலும் தற்போதிருக்கின்ற எழுவான்கரையை எட்டமுடியாது போலத்தான் இருக்கின்றதென நிசாந்தனிடம் காந்தன் கவலையோடு பேசிக்கொண்டிருந்தான்.

எழுவான்கரைப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் கற்று சாதிக்கின்ற மாணவர்கள் பெரும்பாலனவர்கள் படுவான்கரைப் பகுதியைச் சேர்ந்த மாணவர்களே. இப்பகுதியில் உரிய வசதி வாய்ப்புக்கள் இல்லாத நிலையினாலையே எழுவான்கரையை நாடவேண்டியவர்களாக இருக்கின்றனர். அதேவேளை தேசிய ரீதியாக சாதிக்ககூடிய பல மாணவர்கள் இருக்கின்றபோதிலும், சாதனையை நிலைநாட்டுவதற்கான வசதி, வாய்ப்புக்கள் இல்லாத நிலையில் சாதனைகளை வெளிக்காட்ட முடியாதவர்களாக உள்ளனர். குடும்பத்தில் காணப்படுகின்ற வறுமை நிலையின் காரணமாக இலவசக்கல்வியைக்கூட திருப்திகரமாக கொண்டு செல்ல முடியாதவர்களாக இருக்கின்றனர் என்ற கருத்தினையும் நிசாந்தன் முன்வைத்தான்.

படுவான்கரைப் பகுதியில் இல்லாத வசதிகள் குறித்து அங்கலாய்த்து கொண்டிருந்த போதும், ஒருவிடயத்தினை இன்னமும் அழுத்திக் கூறிக்கொண்டிருந்தான்.

அந்தவிடயம் காந்தனின் மனதில் நன்கு பதிந்துகொண்டது. அவ்வாறு எதுபற்றி பேசிக்கொண்டான் என்ற ஆவால் எல்லோருக்கும் ஏற்படலாம், அவன் பேசிக்கொண்டது, பாடசாலை சீருடை தொடர்பில்தான், "பாடசாலை சீருடை என்றால் அரசாங்கம் வழங்குகின்றது தானே?" என பலர் யோசிக்ககூடும். அவர்கள் யோசிப்பதில் தவறில்லை. அரசாங்கம் பிள்ளைகளுக்கு இலவச சீருடைகளை வழங்குகின்றது. ஒரு வருடத்திற்கு ஒரு சீருடையையே வழங்குகின்றது.

வருடம் பூராகவும் ஒரு உடையைதான் நாம்

**புலம்பெயர் தமிழர் கவனத்துக்கு!**

வீட்டில் அணிகின்றோமா? இல்லை, ஒரு வருடத்தில் எத்தனையோ உடைகளை வாங்குகின்றோம் அணிகின்றோம். மாதத்திற்கு நான்கு ஐந்து ஆடைகளை வாங்குகின்றவர்களும் உள்ளனர். அதற்கு மேல் வாங்குபவர்களும் உள்ளனர். அவ்வாறான நிலையில் "அரசினால் வழங்கப்படும் ஒரு உடையை ஒருவருடம் முழுவதும் அணியலாமா? அவை சாத்தியமாகுமா?" என பலர் சிந்திப்பதில்லை. ஆனாலும் ஒரு உடையுடனேயே ஒரு வருடத்தினை கழிக்கின்ற மாணவர்களும் படுவான்கரைப்பகுதியில் இருக்கத்தான் செய்கின்றனர். இந்நிலை மிகவும் வேதனையானதும், துர்ப்பாக்கியமானதுமாகும்.

## ஒரே சீருடையை 180 நாட்கள் அணிய வேண்டும்



சீருடையை கடையில் பணம்செலுத்தி வாங்கமுடியாதளவு வறியவர்களாக உள்ளனர். இதனால்தான் அரசாங்கம் கொடுக்கின்ற ஒரு சீருடையை ஒருவருடம் முழுவதும் ஒவ்வொரு பாடசாலை நாட்களிலும் அணிந்து வருகின்றனர். அண்ணளவாக 180க்கு மேற்பட்ட நாட்கள் ஒரு பிள்ளை ஒரு உடையையே அணிகின்றது. அவ்வுடையை ஒவ்வொரு நாளும் கழுவி, காயவைத்து மறுநாள் அணிய வேண்டும். ஒருநாள் அவ்வுடையை கழுவமுடியாத சந்தர்ப்பம் ஏற்பட்டால் அடுத்த நாள் அப்பிள்ளை பாடசாலைக்கு செல்லமுடியாது. அன்று அப்பிள்ளை விடுமுறையையே எடுத்துக்கொள்ள வேண்டியேற்படும். பாடசாலை விட்டு பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெற்றால் அவ்வகுப்பில் நின்று வீடு செல்கின்ற போது மாலைப்பொழுதாக சென்றுவிடும். அதன்பின் தனது பாடசாலை சீருடையை கழுவமுடியாத நிலையினை அடைகின்றனர். இதனாலும் மறுநாள் பாடசாலைக்கு சமூகம் கொடுக்க முடியாதவர்களாக மாறுகின்றனர். மழை காலங்களில் பிள்ளை பாடசாலைக்கு தொடர்ச்சியாக செல்வதற்கும் சீருடை பெரும் பிரச்சினையாக அமைகின்றது. சீருடையில் தற்செயலாக கழுவியும் செல்லமுடியாத கறைகள் படிந்தால் அதே உடையுடனே ஒருவருடத்தினை கழிக்க வேண்டி ஏற்படும்.


சீருடை என்பது பாடசாலை மாணவர்களுக்கு அவசியமாக இருக்கின்ற போதும், அரசினால் வழங்கப்படுகின்ற ஒரு சீருடை ஒருவருடத்திற்கு போதுமானதல்ல. வசதிகள் படைத்தவர்கள் தமக்கு தேவையான எத்தனை சீருடைகளையும் கொள்வனவு செய்துகொள்வர். ஆனால் அரசாங்கத்தினையும், இலவசக் கல்வியையும் மாத்திரம் நம்பி வாழ்கின்ற மாணவர்களின் நிலை அவலமே. சீருடையின்றி பாடசாலையைக்

அன்றாடம் கூலி வேலை செய்யும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் சிலர், இன்னொரு புதிய பாடசாலைச்

கல்வியையும் இழக்கும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக புலம்பெயர்ந்து வாழும் உறவுகளும், வர்த்தகர்களும் முன்வர வேண்டும். எல்லோரும் செய்கின்ற வேலைகளில் முகத்தினை காட்டி, உதவிசெய்வதாக தம்மையும் இனங்காட்டி செல்ல நினைப்பதனை நிறுத்தி பாதிக்கப்பட்டிருக்கின்ற, வசதி, வாய்ப்பின்றி தவிக்கின்ற படுவான்கரைப் பகுதிபோன்ற பிரதேசத்தில் வாழ்கின்ற மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காகவும் உதவிக் கரங்கள் நீட்டப்பட வேண்டும் என்பதே நிசாந்தனின் வேண்டுகோளுமாகும்.

நிசாந்தன் கூறிய இவ்விடயங்கள் அனைத்தையும் கேட்டுக்கொண்டிருந்த காந்தன் நமது படுவான்கரைக்கு எப்போ விடிவு பிறக்குமோ! என்று முணுமுணுத்தவனாக இருள்சூழ்ந்த வானத்தினை அவதானித்து ஒரு ஒளிகிடைக்காதா வீதியால் செல்வதற்கு என்று நினைத்தவனாக சில்லிக்கொடியாறு நோக்கி சென்றான்.








# அக்கினி புலையவெளி உணவு உற்பத்திப் பொருட்கள்

**சைவ முறையில் தயாரிக்கப்பட்டது**

AGNI PULAYAVELY INDUSTRIES

- சுவையான மரவள்ளிப் பொரியல்
- சுவையான மிக்சர் ஆகியன தற்போது எம்மால் விற்பனை செய்யப்படுகின்றன. தேவையானவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

**தொலைபேசி இல:- 0771516203**

விலாசம் : அக்னி உற்பத்திகள், பதுளை வீதி, புலையவெளி, செங்கலடி. மட்டக்களப்பு

## மரவள்ளிக் கிழங்குச் சீவல்

1 கிலோ 400ரூபாய்



## மிக்சர்

1 கிலோ 400ரூபாய்



எம்மிடம் இருந்து இந்த உற்பத்திப் பொருட்களைப் பெற்று விற்பனை செய்ய விரும்புவோர் விலையைப் பேசித் தீர்மானிக்கலாம்.

கொள்வனவு செய்யப்படும் அளவினை பொறுத்து மட்டக்களப்பிற்கு உட்பட்ட பகுதிகளில் கொண்டுவந்து விநியோகிக்கப்படும்.

(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)

# விளையாட்டு

## தேசிய மட்டத்தில் சாதனையுடன் தங்கம் வென்ற வாழைச்சேனை அந்-நூர் மாணவன்




கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் கடந்த வாரம் இடம்பெற்ற 35ஆவது அகில இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுனர் போட்டிகளின் 14 வயதுப் பிரிவின் ஆண்களுக்கான குண்டெறிதல் போட்டியில் கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்குகொண்ட மட்டக்களப்பு, வாழைச்சேனை அந்-நூர் தேசிய பாடசாலை மாணவன் அப்துல் ரஹ்மான் அஹமட் அய்மன் புதிய தேசிய சாதனையுடன் தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார்.

குறித்த போட்டி நிகழ்ச்சியில் ஏ.ஆர்.ஏ அய்மன், 15.03 மீற்றர் தூரத்தைப் பதிவு செய்து புதிய சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றார்.

முன்னதாக கடந்த 2017ஆம் ஆண்டு மருதானை புனித ஜோசப் கல்லூரியைச் சேர்ந்த நவீன் விஸ்வஜித்தினால் நிலைநாட்டப்பட்ட (13.55 மீற்றர்) சாதனையை சுமார் 2 வருடங்களுக்குப் பிறகு அய்மன் முறியடித்திருந்தமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

மட்டக்களப்பு மத்தி வலய பாடசாலைகளில் ஒன்றான வாழைச்சேனை அந்–நூர் பாடசாலையானது அகில இலங்கை பாடசாலைகள் விளையாட்டு விழாவில் பெற்றுக்கொண்ட முதலாவது பதக்கம் இதுவாகும்.

தேசிய சாதனையுடன் தங்கப்பதக்கம் வென்ற மாணவன், பாடசாலை அதிபர் மற்றும் மாணவனை பயிற்றுவித்த உடற்கல்வி ஆசிரியராக ஆர். அலோஜிதன், விளையாட்டுத்துறைப் பயிற்சியாளர் பி.ரி ப்ரதீப் ஆகியோருக்கு பாடசாலை சமூகம், அபிவிருத்திச் சங்கம், பெற்றோர்கள் மற்றும் பிரதேச விளையாட்டு கழகங்கள் என்பன பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளன.





## மட்டுநகரின் கிரிக்கட் வளர்ச்சியில் கோட்டைமுனை விளையாட்டுக் கிராமம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரிக்கட் விளையாட்டை மேம்படுத்தும்

நோக்குடன் கோட்டமுனை விளையாட்டுக் கிராமம் பல்வேறு வேலைத்திட்டங்களை செய்து வருகின்றது.

அதன் ஒரு கட்டமாக பாடசாலை மட்டத்திலான கிரிக்கட் விளையாட்டை ஊக்ககுவிக்கும் நோக்குடன் பல்வேறு வேலைகளை அது செய்து வருகின்றது. இதன் பயனாக EPP எனும் வளர்ந்துவரும் கிரிக்கட் அமைப்பை உருவாக்கி புனித மிக்கல் கல்லூரியுடன் கிரிக்கட் போட்டியை EPP அமைப்பு ஏற்பாடு செய்து இருந்தது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய 13 வயதிற்குட்பட்ட புனித மிக்கல் கல்லூரி கிரிக்கட் அணியினர் 9 விக்கட்டுகளை இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய EPP அணியினர் 108 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையும் இழந்து ஆட்டம் இழந்தனர்.

இதன் மூலம் மட்டக்களப்பு புனித மிக்கல் கல்லூரியின் 13 வயதிற்குட்பட்ட அணியினர் 74 ஓட்டங்களால் வெற்றியீட்டிக் கொண்டனர்.



இந்தப் போட்டியின் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரிக்கட் விளையாட்டை கோட்டமுனை விளையாட்டுக் கிராமத்தின் பிரதிநிதிகளான EPP அமைப்பினர் வெற்றிகரமாக கொண்டு செல்வதை அவதானிக்க முடிகின்றது.

இந் நிகழ்வில் கோட்டமுனை விளையாட்டுக் கிராமத்தின் உறுப்பினர்களான இ.சிவநாதன், செ.ரஞ்சன், சு.காசிப்பிள்ளை, கு.தயாசிங்கம், நிமால் மோசஸ், ரெ.உமாபதி, த.சஜிதராஜ் ஆகியோர் கலந்து கொண்டதுடன் EPP பயிற்சியாளராக திரு.வசந்தமோகன், திரு. யசோக்குமார், திரு.மதிராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். புனித மிக்கல் கல்லூரி சார்பாக பயிற்றுவிப்பாளர் திரு. சகாந்தன் அவ்வணியை வழிநடத்தியது குறிப்பிடத்தக்கது.

## இந்திய அணியை திணறடித்த வங்கதேசம் 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி



இந்தியா - வங்கதேசம் அணிகள் மோதும் முதல் டி20 போட்டி டெல்லி அருண் ஜெட்லி மைதானத்தில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் முதலில் ஆடிய இந்திய அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 148 ரன்கள் எடுத்தது, அதிகபட்சமாகத் தொடக்க ஆட்டக்காரர் ஷிகர் தவான் 41 ரன்கள் எடுத்தார்.

முதல் ஓவரிலேயே ரோஹித் அவுட்டாகி பார்வையாளர்களுக்கு அதிர்ச்சி கொடுத்தார். இதையடுத்து வந்த கே.எல். ராகுல் 15 ரன்னிலும் ஷ்ரேயாஸ் ஐயர் 22 ரன்னிலும் அவுட்டாகினர்.

நிதானமாக ஆடிய ஷிகார் தவானும் 41 ரன்னில் ரன் அவுட் ஆனார்.

எளிதாக வெல்லக்கூடிய இலக்குதான் என்றாலும், வங்க தேச அணிக்குத் தொடக்கம் அவ்வளவு சிறப்பாக அமையவில்லை.

லிடன் தாஸ் ஏழு ரன்கள் மட்டுமே எடுத்து வந்த வேகத்தில் பெவிலியன் திரும்பினார். பின் நையிமும், சவுமியா சர்காரும் இணைந்து இந்திய பவுலர்களை எளிதாகச் சமாளித்தனர்.

பவுண்டரிகளை விளாசிய நையிம் 26 ரன்களில் சகால் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.ஆட்டம் அவ்வளவுதான் வங்க தேசம் சுருண்டுவிட்டது எனப் பார்வையாளர்கள் கணிக்க, முஸ்பிகுர் அதிரடியாக ஆடி ரன்களை குவித்தார்.

வங்கதேச அணி வெற்றி பெற்ற கடைசி ஓவரில், 4 ரன்கள் தேவைப்பட்டது.

இறுதியில் வங்கதேச அணி 19.3 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 154 ரன்கள் எடுத்து, 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்

Koddamunai Sports Club
Batticaloa

# மிக மிக வித்தியாசமான ஓர் அநுபவம் வாசிப்பு மாதமும் ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலையும்





மிக நீண்ட நாட்களின் பின் அப்பாடசாலைக்குள் அடிஎடுத்து வைக்கிறேன்.

அது ஏறாவூர் அலிகார் தேசியப்பாடசாலை 1950 களின் நடுப்பகுதியில் 1956 இல் என நினைக்கிறேன் அப்பாடசாலையில் நடந்த பேச்சுப்போட்டி ஒன்றில் எனது 13 ஆவது வயதில் கலந்து கொண்டு பரிசு பெற்றமை ஞாபகம் வருகிறது. அதுவே அப்பாடசாலையில் நான் வைத்த முதல் காலடி. அப்போது நான் வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் விடுதியில் தங்கிப் படித்துக்கொன்டிருந்தேன். அப்போது அப்பகுதியில் மிகப்பெரிய பாடசாலை வந்தாறுமூலை மத்திய கல்லூரிதான், அங்கு தமிழ் இஸ்லாமிய மாணவர்கள் விடுதியில் தங்கிப்படித்தனர்; அன்று அலிகார் அதிகம் அறியப்படாத மிகச் சிறியதோர் பாடசாலை.

அப்போது ஏறாவூரில் ஹனிபா என்பவர் அறிவு நூல் நிலையம் என ஒரு புத்தக் கடை வைத்திருந்தார், திராவிடக் கழக நூல்களும் அங்கிருந்தன. பெரியார், அண்ணாதுரை நூல்கள். அப்போது கட்டிட வசதி அதிகம் இல்லாத மிகச் சிறிய பாடசாலை அலிகார் பாடசாலை; அது இப்போது மிக வளர்ச்சி பெற்று பெரும்பெரும் கட்டிடங்களுடன் சகல வசதிகளும் கொண்ட பெரியதோர் தேசியப்பாடசாலையாக நிமிர்ந்து நிற்கிறது. சைக்கிள்கள் வரிசையாக ஒழுங்காக வைக்கப்படிருந்தன.

அமைதியான் சூழல் மாணவர்கள் மாணவிகள் இஸ்லாமிய கலாசார சீருடை அணிந்து ஓர் ஒழுங்குக்குள் நிற்பதாக அவர்களது தோற்றம், அசைவுகள் காட்டின. அதிபர் அறை சகல வசதிகளுடனும் தூய்மையாகத் திகழ்ந்தது. விருந்தினர்கள் அமர அதிபரின் மேசையின் முன்னால் அழகான சோபாசெற், புன்னகை பூத்து நட்போடு வரவேற்கும் ஆசிரிய முகங்கள், மொத்தத்தில் மனம் கவர்ந்த சூழல்.

அதிபர் என்னிடம் 1985 களில் யாழ் பல்கலைக்கழகத்தில் படித்தவர். உப அதிபர் துறைப் பொறுப்பாளர்கள் பலர் என்னிடம் கிழக்குப் பல்கலைக்ழகத்தில் படித்தவர்கள். நூலக பொறுப்பாசிரியர் அஸ்ரப் என்னிடம் கிழக்குப்பலகலைக்கழகத்தில் கல்வி கற்றவர், அங்கு கற்பிக்கும் மௌலவி றிஸ்வான் எனக்கு மிக நெருங்கியவர்.



2014 இல் சுனாமியால் தாக்கப்பட்டு எமது வீடு சீர் குலைந்திருந்த போது ஏறாவூரிலிருந்து எனது மாணவன் குணபாலசிங்கம் (இன்று அவர் கிழக்கு பல்கலைக் கழகத்தில் ஒரு கலாநிதி) அவரது நண்பர்களான இந்த றிஸ்வானையும் இன்னொரு இஸ்லாமிய இளைஞரையும் என் வீட்டுக்கு அவர் கூட்டி வந்திருந்தார். எனது சீரழிந்து வீட்டை மீட்டெடுத்து பழைய வீடாக என்னிடம்



அவர்கள் ஒப்படைத்தார்கள். இவர்கள் அனைவரையும் மிக நீண்ட நாட்களின் பின் பொறுப்பு வாய்ந்த ஆசிரியர்களாக அவர்களின் நடுத்தர வயதில் காண்கிறேன். சிலருக்கு தலைமயிர் நரைத்திருந்தது; பாடசாலையில் அதிபரும் ஆசிரியர்களும் மிகுந்த வாஞ்சையுடன் வரவேற்றனர். காலையில் என்னைச் சூழ பழைய அந்த அன்பு மாணவர்கள் காலைத் தேநீரும் சிற்றுண்டியும் அவர்களுடன் நடந்தேறியது.

அடுத்த அறையில் ஆசிரியர்கள் வந்து கையொப்பமிடுவதை அவதானித்தேன்.

சேலை அணிந்து தமிழ் கலாசாரம் பேணும் ஆசிரியைகள் இரு கலாசாரமும் அருகருகில் மாணவர்களுக்கு தினமும் காட்சிபொருளாக இருப்பது எத்தனை மகிழ்ச்சி. இதனைப்பார்த்து மாணவர்கள் வளர்கிறார்கள் மாணவர்கள்; பாத்துக் கற்பவர்கள். நான் அதனை அவதானிப்பதைகண்ட அதிபர் 35 தமிழ் ஆசிரியர்கள் இங்கு கற்பிக்கிறார்கள் என்றார். அவர்களுள் பலர் என்னிடம் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் படித்தவர்கள்; வந்து வாஞ்சையுடன் வணக்கமுரைத்துச் சென்றனர்.

தேசிய வாசிப்பு தினத்தினையொட்டி காலை அசம்பிளியில் மாணவர்க்கு வாசிப்பின் அவசியத்தை வலியுறுத்தி ஒரு பேச்சு.

அதனை 18;.10.2019 அன்று நிகழ்த்த என்னை அழைதிருந்தமையே நான் அங்கு அன்று செல்லக் காரணம். காலையில் எழுத்தாளர் சப்றி வாகனத்தில் எனை ஏற்ற வந்திருந்தார். போகும் போது பலதும் பத்தும் கதைத்துக்கொண்டு சென்றோம். அவர் ஆசிரியரல்ல ஓர் அரசாங்க உத்தியோகஸ்தர்.

தாங்கள் மாணவர் மத்தியில் வாசிப்புபழக்கத்தை ஏற்படுத்தவும் அவர்களைச் சிறப்பாக எழுதப்பண்ணவும் எடுக்கும் முயற்சிகளை விபரித்துக்கொண்டு வந்தார்.

அவர் பேச்சில் அவர் ஓர் காத்திரமான தீவிர வாசகர் என்பது தெரிய வந்தது.

பாடசாலை ஆசிரியர் அல்லாத நிலையிலும் தம்மைப்போன்ற எண்ணப் பாங்குடைய பலரை இணைத்துக்கொண்டு அவர் செய்யும் பணியினால் எமது உள்ளத்தில் ஓர் பெரும் இடத்தை அவர் பெற்றார்.

ஆசிரியர் அல்லாத நிலையிலும் தனி ஒருவராக நின்று தமிழர் வாழ் பகுதிகளில் மாணவரிடையே இத்தகைய முயற்சிகளில் ஈடுபடும் மலர்ச்செல்வன் ஞாபகம் வந்தார். காலையில் அனைவரும் என்னை அசம்பிளிக்கு அழைத்து சென்றனர்.

**பேராசிரியர் சி.மௌனகுரு**

ஆண்கள் ஒருபுறமும் பெண்கள் ஒரு புறமும் சீருடையில் வரிசையாக நின்றனர்.

கிராத்துடன் கூட்டம் ஆரம்பமானது. கிராத் ஓதிய சிறுமியின் குரல் மனதில் அமைதியை ஏற்படுத்தியது. என்ன இனிமையான குரல் என்னை ஆசிரியர் மாணவர்க்கு அறிமுகம் செய்து வைத்தார்.

நான் உரையாற்ற ஆரம்பித்தேன்.

முதல் நாள் ஆரையம்பதி இ ர ா ம கி ரு ஸ் ண வித்தியாலயத்தில் பேசிய பாணியிலேயே அவ்வுரை அமைந்திருந்தது. ஆனால் இது சற்று வித்தியாசமான முறையில் இரு பையன்களை மேடைக்கு அழைத்தேன்.

அவர்கள் மேடைக்கு வந்தார்கள்; அவர்கள் வயது கேட்டேன்,

12 என்றனர். எனக்கு எத்தனை வயது இருக்குமெனக் கேட்டேன்.

ஒரு பையன் 60 என்றான் மற்றவன் 50 என்றான் கூட்டத்தைக் கேட்டேன்

40 என்றார்கள். இன்னும் கேட்டால் இன்னும் குறைத்துவிடுவீர்கள் எனக்கூறி எனக்கு வயது 77 என்றேன். சபையில் ஒரு வியப்பொலி எழுந்தது

வழமைபோல அவர்களிடம் என்னை என்ன உறவு முறையில் அழைக்கலாம்

என்றேன். மூத்தப்பா என்ற ஒலி எழுந்தது; ஆம் மூத்தப்பா உங்களுக்குக் கதைகூற வந்திருக்கிறேன் எனக்கூறி பேச்சை ஆரம்பித்தேன்.

மிக அமைதியாக மாணவர்கள் கேட்டுகொண்டு நின்றனர்.

முடிவில் நான் மாணவர்களிடம் நாங்கள் படித்த காலத்தில் இஸ்லாமிய மாணவரும் தமிழ் மாணவரும் அருகருகமர்ந்து பல ஆண்டுகள் ஒன்றாகத் தொடர்ச்சியாகப் பயின்றோம்; அதனால் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டோம் பின்னால் பாடசாலைகள் பிரிந்தன; தமிழ்ப்பாடசாலைகளில் இஸ்லாமிய மாணவரும் இஸ்லாமிய பாடசாலைகளில் தமிழ் மாணவர்களும் கல்விகற்கும் நிலை உருவாவது பல பிரச்சனைகளை தீர்க்க உதவும் என அவர்கள் மனதைத் தொடும்படியாகப் பேசினேன். அருகிலிருந்த அதிபர் இங்கு தமிழ் மாணவர்களும் கற்கிறார்கள் சேர் என்றார்.

அவர்களை இங்கு காண்வில்லையே என்றேன். இன்று வெள்ளிக்கிழமை இஸ்லாமிய மாணவர்க்கும் தமிழ் மாணவர்க்கும் வேறு வேறு அசம்பிளி என்றார். எனக்கு வந்தாறுமூலை மத்திய கல்லூரி வாழ்க்கை ஞாபகம் வந்தது பேச்சு முடிய மேடைவிட்டு இறங்கி மாணவரோடு நடந்து வந்தேன்.

பல மாணவர்கள் கைதந்தனர் தொட்டுபார்த்தனர்; அவர்களின் மலர்ந்த வதனங்கள் தொடுகைகள் பல அர்த்தங்களை உணர்த்தின. பேச்சைவிட ஸ்பரிசம் மிகபெரியதல்லவா.

அங்கு கற்பிக்கும் ஆசிரியர் அஸ்ரப்பை நூலகபொறுப்பாளராக போட்டிருந்தனர். என்னை அவரே வீட்டிற்கு அழைத்து வந்து விட்டுசென்றார்.

புறப்படுமுன்னர் ‘சேர் எங்கள் பாடசாலை நூல் நிலையத்தையும் பார்த்துவிட்டுச் செல்லுங்கள்’ என்றார். நூல் நிலையம் சென்றேன் அது மூன்று பிரிவாக முன்று பெரிய அறைகளில் இயங்கியது.

ஒரு அறை வாசிக்கும் பகுதி, இன்னொரு



அறை புத்தகம் இரவல் கொடுக்கும் பகுதி, மூன்றாம் அறை ஈ பேப்பர் பகுதி.

அங்கு கொம்பியூட்டர்கள் மல்டிமீடியா என்பன இருந்தன.

மிக இட வசதியான தூய்மையான கற்க ஆர்வம் ஏற்படுத்தும் அமைதி நிறைந்த அறைகள். இதற்குள்ளால் வளரும் மாணவர்கள் பரந்த அறிவுள்ளோராக உருவாவர். நூல் நிலைய அலுமாரியைத் திறந்தார் அஸ்ரப்.

திருக்குறள் கம்பராமயணம் என நிறையத் தமிழ் செந்நெறி இலக்கிய நூல்கள்.

கம்பராமாயணத்தை நமது இலக்கிய நூல் என தமிழ்பேசும் இஸ்லாமிய மக்களும சீறாப்புராணத்தை எமது இலக்கிய நூல் என தமிழ் மக்களும் பேசும் காலம் வாராதா என மனம் ஏங்கியது.

# இமாலய சாதனை புரிந்த ''தேனகச் செம்மல்'' செ.இராஜதுரை

கலாபூசணம் அரங்கம்
இரா. தவராஜா

*அத்தியாயம்-19*



பேச்சுத்துறையில் இராஜதுரை

அந்த நாளை அவர்கள் இருவரும் எவ்வளவு காலமாக எதிர்பார்த்துக் கிடந்தனர். அவர்களின் இளமை காத்துக் கிடந்தது. வாழ்க்கையிலே அனுபவிக்க முடியாத இன்பத்தை அனுபவித்தார்கள். அச்சமயத்தில் உதயசூரியனின் வரவை காலைச் சேவல் கூவிக்காட்டிற்று. பிரியமனமில்லாமல் இருவரும் ஒருவரையொருவர் விட்டுப்பிரிகிறார்கள். ரோமியோ தோட்டத்து மதிலைத் தாவிக்குதித்துப்போய் பலமணி நேரமாகி விட்டது. இருளையும் பனியையும் துளைத்துக் கொண்டு பூமியில் விழுந்த சூரியக்கதிர்கள் உஷ்ணமேறிற்று. ஆனால் இருளுக்கும் ஒளிக்கும் இடையிலுள்ள நேரத்தில் ரோமியோ மறைந்து சென்றபின் அத்திசையைத் தன் வைத்தகண் வைத்தபடி யூலியட் பார்த்துக்கொண்டு நின்றாள். செவிலித்தாய் எமிலியா அருகில் வந்தபோது அவளின் தோளைத் தொட்டு திரும்பியபோது அவள் தன் பார்வையை வேறுதிசையில் திருப்ப முனையவில்லை. ரோமியோ மறைந்து போன போதிலும் அவனுடைய கம்பீரமான தோற்றம் சென்ற அத்திக்கிலேயே அவள் அவன் உருவைப் பருகிக் கொண்டிருந்தாள்.

தேனைப்போல் இனிமையும் தென்றலைப்போல் சுகமும் தேன்மதியைப்போல் மனமகிழ்வும் நிறைவும் கொடுக்கிறது. சேக்ஸ்பியரின் இக்காட்சி.


இதோ! நம் மொழியில் உள்ள இக்காட்சியையும் கவனியுங்கள். யானைத் தந்தத்தால் கடைத்தெடுக்கப்பட்ட தங்கச்சிலையைப் போன்ற அழகு சுந்தரி ஒருத்தியின் கண்கள் நீரோற்பல மொட்டைப்போல அழகாயிருக்கின்றன.

அந்திவானத்தின் இரத்தச் சிவப்பேறிய அதரங்கள்; அலைபுரளும் மயிர்ச்சுருக்கங்கள்; அவள் சிரித்தால் முல்லை மொட்டவிழ்தல் போலிருக்கும். அத்தகைய இளம் பெண்ணின் கண்களிலே ஏதோவொரு ஏக்கம்; நடையிலே தளர்ச்சி; பேச்சிலே சோகம்; அடிக்கடி பெருமூச்சு விடுகிறாள். வழக்கம்போல ஒருநாள் வாடிவதங்கிய தோற்றத்தோடு படுக்கையில் போய்ப் படுத்தாள்.


மலர்களைத்தூவி; தென்றலை விசிறிகளால் வருடிக்கொணர்ந்து அவள் மேனியைப் போர்த்தார்கள்.

கன்னிப் பெண்களின் புன்னகையைப் போல் பொழுதுபுலர்ந்தது. புள்ளினங்கள் தங்கள் மெல்லிய குரலை மீட்டுக் கொண்டு வானவீதியில் எழுந்து பறந்தன. எங்கும் ஒரே கலகலப்பும்; குதூகலமும் வழிந்தோடின. காலைச் சூரியனின் பொன்னிறக்கதிர்கள் அவள் மஞ்சள் நிற மேனியில் பட்டுத்தெறித்தன. மஞ்சள் தேய்த்துக் குளித்து; மதுவும்; மணமும் பொதிந்த மலர்களை கூந்தல்களிலே அள்ளிச்சொருகிய தோழிகள் தங்கள் தலைவி இதுவரை படுக்கையை விட்டுத் துயில் எழாதது கண்டு பதைபதைத்தவராய் ஓடினர். முகத்திலே புன்முறுவல் பூத்தபடி மஞ்சத்திலே தூங்கிக் கொண்டிருந்தாள். என்றுமில்லாத அழகு அவள் வதனத்திலே பளிச்சிட்டது.

தோழிகள் அவள் மூக்கில் விரலை வைத்துப்பார்த்தார்கள். மார்பகத்தில் காதை வைத்துப் பார்த்தார்கள். கைகொட்டிச் சிரித்தார்கள். கால் சதங்கைகளை ஒலிக்க ஆடினார்கள். கானாமிர்த கீதம் பொழிந்தார்கள். இதற்கெல்லாம் அவள் கண்களைத்



திறக்கவுமில்லை. கட்டிலை விட்டு எழவுமில்லை. கடைசியாக அவள் அழகான கைகளைப் பிடித்து இழுத்தார்கள். அவள் அணிந்திருந்த



வளையல்கள் பட்படடெனச் சிதறின. ஆனால் அவள் கண்களை மூடிய கைகளை அகற்றவில்லை. பதிலுக்கு அவள் பவழ இதழ்கள் விரிந்தன. அங்கு ஒரு பாட்டுப் பிறந்தது. நான்கே நான்கு வரிகள். இதிலே நாநூறு பக்கங்களைக் கொண்ட காப்பியம் மறைந்து கிடந்தன.

'தலையவிழும் பூங்கோதை தாயரே
ஆவிகளையினும் என்
கண்திறந்து காட்டேன்
வளை கொடுவோம் வண்
கண்ணன் மால்யானை
தன்னுடன் வாள் மாறன்
என் கண் புகுந்தான்
இரா';;;;

என் அன்புக்குரிய சேடிகளே! என்னருமை உயிர் இந்த அழகான உடலை விட்டுப் பிரிந்தாலும் கண்களைத் திறக்கவும் மாட்டேன். கைகளை அகற்றவும் மாட்டேன். ஏன் தெரியுமா? எத்தனையோ நாட்களாக ஏங்கித் தவம் கிடந்த என் இதய வீணையில் இன்னிசை நாதமெழுப்பிய என் நெஞ்சைக்கவர்ந்த காதலன் சேரன் முத்துக்கள் விளைந்த கொம்புகளையுடைய யானையின் மீது அமர்ந்தபடி இரவு என் கண்களினூடாக புகுந்து என் இதயக்கமலத்திலே அமர்ந்துவிட்டான். அதனால் நான் அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை. அந்த நாளை எத்தனை நாட்களாக நான் காத்துக்கிடந்தேன் தெரியுமா? அந்த ஏக்கத்தின் தவிப்பு இன்றைய இன்பத்தின் பூரிப்பும் எனக்கல்லவா தெரியும்.... என்கண்களைத் திறக்கச் சொல்கிறீர்களே! உங்களுக்கு மூளை இருக்கின்றதா? நான் என் கண்களைத் திறந்தால் காதலன் வந்த வழியாலேயே கண்களினூடாக வெளியே போய் விடப்போகிறான்.

அவனை நான் போக விடப் போவதில்லை. ஆகவே என் கண்களைத் திறக்கப் போவதில்லை. எவ்வளவு அழகான கவிதை பார்த்தீர்களா? சேக்ஸ்பியருடைய காவியங்கள் கற்கண்டானால் செந்தமிழ் ஏடுகள் அக்கற்கண்டின் உற்பத்திக்கான கரும்பின்சாறு.

மேற்காட்டிய கவிதை



முத்தொள்ளாயிரத்தில் ஒன்றாகும். மொத்தம் இரண்டாயிரத்து எழுநூறு பாடல்களிலே இது ஒன்று. இரண்டாயிரத்து எழுநூறு கவிதைகளையும் படிக்கக் கிடைத்திருந்தால் ஆஹா அந்தப் பாக்கியம் பெரும்பாக்கியம் ஆனால் தமிழ் மக்களுக்குக் கிடைக்கவில்லையே! தொண்ணூற்று மூன்று பாடல்களேதான் தமிழகத்திற்குக் கிடைத்திருக்கின்றன.

தன் முத்துக்களைவிட உயர்ந்தனவாக தமிழ்நாட்டின் முத்துக்கள் இருக்கின்றனவென பொறாமை கொண்ட கடல் தமிழகத்தை விழுங்கி விட்டது.

தொண்ணூற்றி மூன்று கவிதைகளாவது மிஞ்சியதே அது தமிழ் செய்த பாக்கியந்தான் இவை எல்லாம் பழங்கதைகளல்லவா? இவற்றைப் பேசுவதிலே என்ன பெருமை இருக்கப்போகிறதென நீங்கள் நினைக்கலாம். பழங்கதைகளைப் பேசிக்கொண்டு "நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி வஞ்சனை புரிவாரடி கிளியே வாய்ச் சொல்லில் வீரரடி" என்று பாரதி கொதித்து குமுறியெழுந்தார்.

மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லையென்று! இவை பழங்கதைகளல்ல பைந்தமிழ் நாட்டின் பாழாய்ப்போன பரிதாபத்துக்குரிய நிலையின் படப்பிடிப்பு.

(தொடரும்)

# அக்கரைப்பற்றான் கதை 02.

எனது தாயார் நான் சிறையில் இருக்கும்போதே இறந்து போனார். ஒருபிடி மண் கூட போடவில்லையே என்னும் கவலையைவிட எனது உழைப்பில் என் தாயாருக்கு ஒரு பருக்கை கூட கிடைக்கவில்லையே என்பதே எனது எப்போதுமான கவலை.



என் தாயார் வயதிலுள்ள பெண்கள் முஸ்லீமோ, தமிழோ, சிங்களமோ யாராக இருந்தாலும் நேரில் காணும்போதெல்லாம் சந்தர்ப்பம் கிடைக்கும் போதுகளில் அவர்களுடன் பேசுவதென்பது எனக்கான மன ஆறுதல். ஏழ்மை நிலையானதாகவோ, சோகமானதாகவோ காணும் அந்த தாய்களுக்கு நானாகவே உதவுவதுமுண்டு.

அதில் எனக்கொரு சந்தோஷம்.

அன்று நான் அக்கரைப்பற்று சந்தையில் புடவைக் கடை வைத்திருக்கும் நண்பன்



அர்சாத்தை சந்தித்து கடைக்கு வெளியே நின்று பேசிக்கொண்டிருக்கும் போதுதான் அந்த உம்மாவும் வந்தார். நமக்கு உகந்ததான சோகமுகத்துடனேயே.

எப்பிடிம்மா சுகமா? என்று கேட்கும்போதே அர்சாத் பின்னால் நின்று எனது முதுகை நோண்ட தொடங்கி விட்டான்.

உம்மாவுடன் பேசிக்கொண்டே சிறிது நேரம் போனதும் உம்மாவுக்கு பணம் கொடுத்து செலவுக்கு வைச்சிக்கும்மா என்றதும் உம்மாவுக்கு ஆச்சரியம்.

நான் யார் ?எந்த ஊர் ? எந்த மதம்? இது எதுவுமே உம்மாவுக்கு தெரியாது.

பேசிக் கொண்டிருக்கும்போதே உம்மாவின் சினேகிதி ஒருவரும் முருங்கைக்காய் கட்டொன்றுடன் வந்து சேர்ந்தார்.

" வாகா... சந்தைக்கு வந்தா? நானும் சந்தைக்குத்தான் போக... இந்த புள்ள கதைக்க புடிச்சிக்கு... "

**விமல் குழந்தைவேலு**

சினேகிதி உம்மா என்னை சினேகமாக பார்த்தார்.

" நம்மட ஊராத்தான் இரிக்கோணும் ... முன்ன பின்ன நான் கண்டில்ல... மவன் வெளிநாடிருந்து வந்தா மவன் ? வெளிநாடுதான் ... மொகத்த பாக்க தெரியுதெலுவா ? எவடம் மவன்.சவ்வூதியா கட்டாரா, குவைத்து?"

வெற்றிக்கொடி வடிவேலாகவே மாறிவிட்டா உம்மா.
" இஞ்சாருகா நேக்கி காசும் தந்திச்சிகா "
பொத்திய கையை விரித்து காட்டிய உம்மா
" நோக்கும் தராமலா உட்டுடும்"
என்று சொல்ல சினேகிதி உம்மாவின் எதிர்பார்ப்பை ஏமாற்ற விரும்பாத நான் அவருக்கும் கொடுக்க, வாங்கியவர் அல்ஹம்துலில்லாஹ் என்று விட்டு போய் விட...
" நானும் வரட்டா மவன்... "
" சரி உம்மா நல்லம் போய் வாங்க"
அர்சாத் முதுகை சுறண்டுவதை நிறுத்தவே இல்லை.
இரண்டடி நடந்த உம்மா திரும்பி வந்தா.

" என்னும்மா?"

" பெருநாள் வருகுதெலுவா மவன் உம்மாக்கு புடவை எடுக்கோணுமே மவன்"

" சரி உம்மா நான் இவரிட்ட சொல்றன் பெருநாளுக்கு முன்ன வந்து கேளுங்க உங்களுக்கு இவர் புடவை ஒண்டு தருவார்" என்று அர்சாத்தை காட்டினேன்.

உம்மா அர்சாத்தின் கடையை வெளியில் நின்றே நோட்டம் விட்டா. அதொரு விசாலமில்லாத ஒடுக்கமான கடை.

" இந்த கடையிலையா மவன்? இத உட்டுப்போட்டு ஒரு நல்ல கடையில எடுத்துக்கலாமே .. ம்ம் பரவாயில்ல நான் வாறன் மவன்."

கடுப்பாகிய அர்சாத் என்னை வலுக்கட்டாயமாக இழுத்துக்கொண்டு கடைக்குள் போய் ஒரு கதிரையை காட்டி இதுல சும்மா இருங்கண்ண என்றான்.

" ஏண்டா.. உனக்கென்னடா பிரச்சினை? ஏன் முதுகையே நோண்டிக் கொண்டு நின்றாய் "?
" எனக்கொரு பிரச்சினையும் இல்ல... இன்னும் ஒள்ளம் உட்டிருந்தா உம்மா ஒங்கட ஊடு வளவையும் எழுதி கேட்டிருப்பா.. அதான்."

சிறை பிடிக்கப்பட்டதுபோல என்னை இருக்க வைத்துவிட்டு சோடா வாங்க போய்விட்டான் அர்சாத்.

---

தொடர்ச்சி...

# போட்டியிடும்.....

விடயத்தை வரலாற்றில் முதல் தடவையாக வெளியிட்டது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, புதிய ஜனநாயக முன்னணி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளினால் கடந்த அக்டோபர் மாதம் 14ஆம் தேதி முதல் 31ஆம் தேதி வரையான செலவீனங்களை அந்த நிலையம் வெளியிட்டது.

குறித்த காலப் பகுதியில் மாத்திரம் மூன்று பிரதான கட்சிகளும் சுமார் 962 மில்லியன் ரூபாய் செலவிட்டுள்ளதாக அந்த நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்படி, கோட்டாபய ராஜபக்ஷ போட்டியிடும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 574 மில்லியன் ரூபாயையும் சஜித் பிரேமதாஸ போட்டியிடும் புதிய ஜனநாயக முன்னணி (ஐ.தே.மு) 372 மில்லியன் ரூபாயையும் அநுர குமார திஸாநாயக்க போட்டியிடும் தேசிய மக்கள் சக்தி இந்த காலப் பகுதியில் 16 மில்லியன் ரூபாயையும் இந்தக் காலப்பகுதியில் செலவிட்டுள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

அச்சு ஊடகம், ஒளிபரப்பு ஊடகம், சமூக ஊடகம் மற்றும் ஏனைய செலவுகள் (கூட்டங்கள், ஊர்வலங்கள், காட்சிப் பொருட்கள், அரச சொத்துகளின் துஷ்பிரயோகச் செலவுகள்) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் இந்த செலவீன அறிக்கையை தயாரித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் புதிய ஜனநாயக முன்னணி (ஐ.தே.மு) ஆகியன ஒளிபரப்பு ஊடகத்திற்காகவே அதிகளவிலான செலவீனங்களை மேற்கொண்டுள்ளதாக அந்த நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஒளிபரப்பு ஊடகத்திற்காக 456 மில்லியன் ரூபாய் செலவீனம் செய்துள்ளதுடன், புதிய ஜனநாயக முன்னணி (ஐ.தே.மு) 219 மில்லியன் ரூபாய் செலவீனம் செய்துள்ளது.

அதேபோன்று தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி) ஒளிபரப்பு ஊடகத்திற்காக 4 மில்லியன் ரூபாய் செலவீனம் செய்துள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.மேலும், கள ரீதியான பிரசாரத்திற்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 76 மில்லியன் ரூபாய் செலவீனம் செய்துள்ள அதேவேளை, புதிய ஜனநாயக முன்னணி (ஐ.தே.மு) கள ரீதியான பிரசாரத்திற்கு 85 மில்லியன் ரூபாவை செலவீனம் செய்துள்ளதாக கூறப்படுகின்றது.

தேசிய மக்கள் சக்தி கள ரீதியான பிரசாரத்திற்காக 11 மில்லியன் ரூபாய் செலவீனம் செய்துள்ளது.அத்துடன், அச்சு ஊடக பிரசாரத்திற்காக புதிய ஜனநாயக முன்னணி (ஐதே.மு) 68 மில்லியன் ரூபாய் செலவீனம் செய்துள்ளதுடன், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அச்சு ஊடகத்திற்காக 42 மில்லியன் ரூபாயை செலவீனம் செய்துள்ளது.

தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி) அச்சு ஊடகத்திற்காக ஒரு மில்லியன் ரூபாய் செலவீனம் செய்துள்ளதாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் குறிப்பிடுகின்றது.

சமூக ஊடகத்தின் ஊடாக இந்த முறை ஜனாதிபதித் தேர்தலில் அதிகளவிலான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கணிப்பிடப்பட்டுள்ளது,

இதன்படி, ஃபேஸ்புக் சமூக வலைத்தளத்தை பயன்படுத்தி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அதிகளவிலான பிரசாரத்தை மேற்கொண்டுள்ளதுடன், புதிய ஜனநாயக முன்னணியும் ஃபேஸ்புக் சமூக வலைத்தளத்தை குறிப்பிடத்தக்களவு பயன்படுத்தியுள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 35 வேட்பாளர்களில் மூன்று பிரதான வேட்பாளர்களின் செலவீனங்கள் இவ்வாறு இருக்க, ஏனைய வேட்பாளர்கள் ஒட்டு மொத்தமாக சுமார் 20 மில்லியன் ரூபாய் செலவீனம் செய்துள்ளதாக அந்த நிலையம் கணிப்பீடு செய்துள்ளது.

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 52

## தரம் 11 - தமிழ்மொழியும் இலக்கியமும்

- மட்டுநகர் யுவன் -

2019இல் க.பொ.த (சா.த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு உதவும் வகையில் இந்த வினாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றைச் செய்துபாருங்கள். இவற்றுக்கான விடைகள் அடுத்த வார அரங்கத்தில் வரும்.

தமிழ்மொழியும் இலக்கியமும் I

- தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

1.'என்னக்கேட்டு அவ் இரக்கம் இலாளையும்...' - இங்கு இரக்கம் என்பது
(1) நற்குணம் (2) நேர்மை (3) பண்பு (4) கருணை

2. 'கோது இலான் இந்த மொழி கூறுதலும்...' - இங்கு கோது என்பது
(1) குற்றம் (2) பயம் (3) விதையின் மேற்பரப்பு (4) வெற்றி

3. குளித்து மணற்கொண்ட கல்லா இளமை...' - இங்கு இளமை என்பதன் எதிர்க்கருத்து
(1) பெருமை (2) வீரம் (3) முதுமை (4) கயமை

4. 'நீங்கக் காண்பது சேர்ந்தவர் பாவம்...' - இங்கு பாவம் என்பதன் எதிர்க்கருத்து
(1) கறை (2) புண்ணியம் (3) அட்டூழியம் (4) பகை

5. 'எம்குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே!' - இத்தொடர் மூலம் உணர்த்தப்படுவது
(1) ஏக்கம் (2) உறவு (3) நட்பு (4) கையறுநிலை

- பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

6. சில, பழைய பொருள்களுக்கு இன்னும் டிமாண்ட் (ஞுநஅயனெ) இருக்கிறது. இங்கு 'டிமாண்ட்' என்பதன் கலைச்சொல்
(1) கேள்வி (2) வாய்ப்பு (3) மகத்துவம் (4) கொடுக்கல் வாங்கல்

7. பின்வரும் சோடிகளுள் ஒரு சோடி வேறுபட்டுள்ளது. அச்சோடி
(1)வாழை – கச்சல் (2) பலா – சுளை (3) பனை – நுங்கு
(4) தென்னை – குரும்பை

8. நேர அட்டவணையின் பிரகாரம் பரீட்சை நடைபெறும். இங்கு 'அட்டவணை' என்பது
(1) பாளிமொழிச் சொல் (2) மராட்டிமொழிச் சொல் (3) உருதுமொழிச் சொல்
(4) தமிழ்மொழிச் சொல்

9. சர்ப்பம், அரவம், பணி என்னும் பல பொருள் தரும் ஒருசொல்
(1) சத்தம் (2) வேலை (3) சரசரப்பு (4) பாம்பு

10. ஆண் மானைக் குறிப்பது கலை : ஆண் குதிரையைக் குறிப்பது
(1) வடவை (2) பிடி (3) குண்டு (4) போத்து

11. 'மேலெழுந்தவாரியாகப் படித்தல்' என்னும் பொருள் தரும் மரபுத்தொடர்
(1) அரைப்படிப்பு (2) தட்டிக்கழித்தல் (3) நுனிப்புல் மேய்தல்
(4) துறைபோதல்

12. 'பல்லுக்கடித்தல்' என்னும் மரபுத்தொடர் உணர்த்தும் பொருள்
(1) கோபத்தை வெளிக்காட்ட முடியாமல் உள்ளே அடக்கிக்கொண்டிருத்தல்
(2) பசியின் கொடுமையால் வாடிப்போயிருத்தல்
(3) பல்வலி தாங்க முடியாமல் பற்களைக் கடித்துக்கொண்டிருத்தல்
(4) துன்பம் தரும் ஒன்றைச் சகித்துக்கொண்டிருத்தல்

13. 'அருமந்த' என்பது மரூஉ. அதன் இலக்கணமுடைய வடிவம்
(1) அருமருந்து (2) அருமருந்தன்ன(3) அருமையும் மருந்தும்
(4) அருமையான

14. சிரஞ்சீவி என்பவன்
(1) நெடுங்காலம் வாழ்பவன் (2) மலையில் வாழ்பவன்
(3) கவலையில் வாழ்பவன் (4) மூலிகை உண்பவன்

15. 'வீண்பெருமை' என்னும் பொருள் தரும் பழமொழி
(1) யானை படுத்தால் குதிரை மட்டம் (2) பேச்சு பல்லக்கு தம்பி கால்நடை
(3) உருட்டும் புரட்டும் ஒடுக்கும் சிறப்பை (4) இரக்கப் போனாலும் சிறக்கப் போ

16. 'அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது' என்னும் பழமொழி உணர்த்தும் பொருள்
(1) ஒரு விடயம் சிறிதாக இருப்பினும் அது முக்கியத்துவமானதெனில் உயர்வைப் பெறும்.
(2) சில்லு இல்லாவிட்டாலும் அச்சாணி இருப்பது அவசியமானதென்பது வலியுறுத்தப்படுகிறது.
(3) அச்சாணி இல்லாவிட்டால் மூன்று சாண்தான் ஓடாது' இரு சாண் ஓடும்.
(4) தேர்ச்சில்லுகளின் முக்கியத்துவமும் அச்சாணியின் முக்கியத்துவமும் சொல்லப்பட்டுள்ளன.

17. பின்வருவனவற்றுள் அடுக்கிடுக்குத் தொடர் அல்லாதது
(1) விட்டவிழி (2) வெட்டவெளி (3) நட்டநடு (4) பட்டப்பகல்

18. 'வளர்த்த கடா மார்பிற் பாய்ந்தது போல' என்னும் உவமைத் தொடருக்கு ஒத்ததான பிறிதொரு உவமைத் தொடர்
(1) வெந்த புண்ணில் வேல் பாய்ந்தது போல
(2) பசுத்தோல் போர்த்திய புலி போல
(3) புயலில் அகப்பட்ட கலம் போல (4) தீட்டிய மரத்தில் கூர்பார்த்தது போல

19. 'வழிமேல் விழிவைத்து' என்னும் அருஞ்சொற்றொடரால் உணர்த்தப்படுவது
(1) மிகுந்த பேராசை (2) மிகுந்த கண்விழிப்பு (3) மிகுந்த எதிர்பார்ப்பு
(4) மிகுந்த வரவேற்பு

20. விறுவிறு என்று நடந்து போனவரைப் பார்த்து, "வரவர உமது போக்குச் சரியில்லை" என்று நண்பன் கூறினான். இங்கு விறுவிறு, வரவர என்பன முறையே
(1) இரட்டைக் கிளவி, அடுக்கு மொழி (2) அடுக்கு மொழி, இரட்டைக் கிளவி
(3) இரட்டைக் கிளவி, இணைமொழி (4) அடுக்கு மொழி, இணைமொழி

21. 'கரையவர் மருள திரையகம் பிதிர நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து...' இங்கு 'துடும்' என்னும் ஒலிகுறிப்புச் சொல் உணர்த்தும் பொருள்
(1) நிதானம் (2) ஆச்சரியம் (3) உற்சாகம் (4) விரைவு

22. பின்வருவனவற்றுள் வேற்றுநிலை மெய்ம்மயக்கம் இடம்பெற்றுள்ள சொல்
(1) மூக்கு (2) அண்ணம் (3) வெங்காயம் (4) பருப்பு

23. பகுதி இரட்டித்துக் காலம் காட்டுவது
(1) கற்றான் (2) பெற்றான் (3) விற்றான் (4) நிறுத்தான்

24. அவன் அழகாக நிலவை இரசித்தான். இங்கு 'அழகாக' என்பது
(1) பெயரடை (2) செயப்படுபொருள் அடைமொழி
(3) எழுவாய் அடைமொழி (4) வினையடை

25. மூன்றாம் வேற்றுமை 'ஆல்' உருபு ஏற்காத தொடர்
(1) சொன்னால் செய்வேன் (2) வேதனையால் துடிப்பேன்
(3) பிரம்பால் அடிப்பேன் (4) கண்ணால் பேசுவேன்

26. திரிதல் விகாரம் இடம்பெற்றுள்ள புணர்ச்சி
(1) தேன்துளி (2) மான்விழி (3) மாங்கனி (4) பொற்கிளி

27. அவன் ஒழுங்காகப் பேசினான். அவன் நாலாம் இடத்தையே பெற்றான்.
- மேற்படி இரு வாக்கியங்களையும் இதே ஒழுங்கில் இணைப்பதற்குப் பொருத்தமான இணைப்பிடைச்சொல்
(1) அதனால் (2) ஆகவே (3) எனினும் (4) ஏனென்றால்

28. நாம் என்னதான் சொன்னாலும் அவன் ஒன்றையும் கேட்கமாட்டான். இதில் வந்துள்ள எழுவாய்
(1) நாம் (2) அவன் (3) ஒன்றையும் (4) கேட்க

29. அகராதி ஒழுங்கில் அமைந்த சொற்றொகுதி
(1) அகலம், அகிலம், அகரம், அவலம்.
(2) மணல், மதம், பார்வை, பிராணி.
(3) ஆடுகளம், ஆசை, தேடினான், யகரம்
(4) தேர், வேதனை, பதினான்கு, பகல்.

- பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியைத் தெரிவுசெய்க.

30. (1) காரணச் சிறப்புப் பெயர் : கிளி, மரங்கொத்தி, மீன்கொத்தி.
(2) இடுகுறிச் சிறப்புப் பெயர் : மா, தென்னை, பலா.
(3) காரணப் பொதுப் பெயர் : பறவை, அணி, விலங்கு.
(4) இடுகுறிப் பொதுப் பெயர் : மண், மலை, மரம்.

31. (1) கூட்டுவினை : தூங்கவை, தட்டிக்கேள், சரிபார்.
(2) செயப்படுபொருள் குன்றியவினை : வந்தான், இருந்தான், போனான்.
(3) ஏவல் வினை : போ, இரு, செல்லாதே.
(4) வியங்கோள் வினை : வாழ்க, வாழிய, வாழ்.

பக்க அனுசரணை
NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

# கற்போம்

## விஞ்ஞானம்

குணம் சவரிராஜா

பன்மடியநிலை (Polyplody)
ஒவ்வொரு கலக் கருவிலும் இரண்டுக்கும் கூடுதலான அமைப்பொத்த நிறமூர்த்தங்களின் முழுமையான கூட்டங்கள் இருப்பதை பன்மடியம் குறிப்பிடுகின்றது. தாவரங்களில் எதிர் இழையுருப்பிரிவுக் காரணியான கொல்சிசைனைப் பயன்படுத்தி பன்மடிய நிலை தூண்டப்படலாம்.

தாவர இனவிருத்தியின் பன்மடிய விளைவுகளுள் முக்கியமானதொன்று யாதெனில், பரம்பரையலகுப் பிரதிகளின் பெரியளவான எண்ணிக்கை காரணமாக நிகழும் தாவர உறுப்புகளின் பெருக்கம் ("gigas" தாக்கம்) ஆகும். பன்மடியமுள்ள தனியன்கள் அவற்றின் இருமடியமான ஒத்தநிறையினருடன் ஒப்பிடப்படும்பொழுது வேர்கள், இலைகள், முகிழ்கள், பூக்கள், பழங்கள் மற்றும் வித்துக்கள் போன்ற பெரிய உறுப்புக்களை இவ்வாறு காட்சிப்படுத்தலாம். பன்மடியத்தாவரங்கள் சார்பான இருமடியங்களைப் பார்க்கிலும் குறைந்த வளர்ச்சி வீதத்தைக் கொண்டனவாக பிந்தி அல்லது நீண்ட காலத்துக்குப் பின்னர் பூக்கவும் கூடியனவாக உள்ளன. இது அலங்கார இனவிருத்தியில் விரும்பப்படும் ஒரு சிறப்பம்சம் ஆகும்.

அத்துடன் பன்மடியம் அநேகமாக ஒடுக்கற்பிரிவில் ஏற்படும் தவறுகள் காரணமாக குறைந்தளவு வளமுடையனவாகக் காணப்படுகின்றன. இது மும்மடிய வெள்ளரிக்காயின் வித்துக்களற்ற பேதங்கள் போன்றவையை ஏற்படுத்துகின்றது. மறுகையில் மடிய மட்டத்தில் காணப்படும் வேறுபாடுகள் காரணமாக இரண்டு இனங்களுக்கிடையே இனக்கலப்பு சாத்தியமற்றதாக காணப்படும் பொழுது, அவற்றிற்கிடையே பரம்பரையலகுகள் கடத்தப்படும் ஒரு பாலமாக பன்மடியங்கள் பயன்படுத்தப்பட முடிகின்றது. அதுபோன்றே புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட வளமற்ற கலப்புப்பிறப்பில் சீனோம் (genome) இரட்டிப்பாதல் அதன் வளமுடைத்தன்மையை மீட்டெடுப்பதற்கு வழிகோலுகின்றது.

சீனோம் மிகையானது (மடிய நிலை அதிகரித்ததன் காரணமாக மேலதிக பரம்பரை அலகுகளைக் கொண்டிருத்தல்) வேறு அனுகூலங்களையும் கொண்டது. அது ஓர் "தாங்கற்றன்மை" யை ஊக்குவிப்பதால் அதில் தேவையற்ற எதிருருக்கள் வான்-வகை எதிருருக்களின் மேலதிக பிரதிகளால் மறைக்கப்பட்டு விடுகின்றன. அதேவேளை அது மிகையான பரம்பரையலகுப் பிரதிகளின் பெருக்கத்தை அனுமதிக்கின்றது. அதில் பிரதியாக்கமடைந்த பரம்பரையலகுச் சோடியின் ஒரு அங்கத்தவர் விகாரமடைந்து அத்தியாவசியமான தொழிற்பாடுகளுடன் இணக்கமடையாமல் ஒரு புதிய தொழிலைப் பெற்றுக் கொள்ளுகின்றது. இதரநுகநிலையில் ஏற்படும் பெருக்கம் பன்மடிய நிலையைத் தொடரும் மற்றுமொறு அம்சமாகும். இதரநுகநிலையின் உயர் மட்டங்கள், உற்பத்தித் தரம் மற்றும் உயிருக்குரிய, உயிரிலித் தகைப்புக்களுக்கான சகிப்புத்தன்மை ஆகியவற்றை அதிகரித்து சோளம், உருளைக்கிழங்கு மற்றும் அல்பா தாவரங்களின் வீரியப் பெருக்கத்துடன் நேர் சார்புடையதாக விளங்குகின்றன.

விகார இனவிருத்தி (Mutation breeding)
விகாரத்தை தூண்டும் முறைகள் பயிர்த்தாவர இனவிருத்தியில் புதிய பிறப்புரிமையியலுக்குரிய மாறல்களின் மூலங்களை உற்பத்திபண்ணும் திறனுடையனவாக உள்ளன. முன்னேற்றப்பட வேண்டிய இயல்புக்கான மாறல்தன்மை இனத்தின் பரம்பரையலகுத் தடாகத்தினுள்ளே கிடைக்கப்பெறுதல் குறைவாக அல்லது முழுமையாக அற்றிருக்கதாகத் தோன்றும் பொழுது இந்த முறைகள் கையாளப்படலாம். பயிர்த்தாவரங்களில் விரும்பப்படுகின்ற விகாரங்கள் இரசாயன அல்லது பௌதீக முறைகளைப் பயன்படுத்தித் தூண்டப்படும் முறை விகார இனவிருத்தி என அழைக்கப்படும்.

விகாரத்தை நிகழ்த்துவதற்கு பல காரணிகள் பயன்படுத்தப்படலாம். இது காமா கதிர்கள், புரோத்தன்கள், நியூத்திரன்கள், அல்பா மற்றும் பீற்றா துணிக்கைகள் போன்ற மின்னூட்டற் கதிர்வீசல் மற்றும் சோடியம் ஏசைட்டு, ஈதைல் மீதேன்சல்போனேற்று போன்ற இரசாயனப்பதார்த்தங்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. இந்தப் பராமரிப்புக்களால் தூண்டப்படும் விரும்பப்படும் விகாரங்கள் மிகவும் தாழ்ந்ததொரு மீடிறனில் (மொத்த விகாரத்தைத் 0.1%) காணப்படுவதால், விரும்பப்படும் ஒரு விகாரத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு இனவிருத்தியாளர்கள் ஒரு பெரிய குடித்தொகையைத் திரையிட வேண்டியுள்ளது. அத்துடன் பெரும்பான்மையான விகாரங்கள் ஓர் பின்னிடைவான முறையில் செயற்படுவதாலும் அவற்றின் ஒத்தநிலையினர்களினால் மறைக்கப்படும் சாத்தியத்தை கொண்டிருப்பதனாலும் திரையிடற் செயற்பாடு மேலும் கடினமாக்கப்படுகின்றது. தூண்டப்பட்ட விகாரங்கள் பயன்படுத்தப்படுதலின் வெற்றித் தன்மையானது, தாவரத்தின் விருத்தியடையும் தொகுதியிலே தங்கியுள்ளது. தன்மகரந்தச்சேர்க்கையடையும் தாவரங்களில் அதன் பயன்பாடு, அயன்மகரந்தச் சேர்க்கையடையும் தாவரங்களிலும் விட கூடியளவு வெற்றிகரமாக உள்ளது. அயன்மகரந்தச் சேர்க்கையடையும் தாவரக் குடித்தொகைகள் பிறப்புரிமையியல்புக்குரிய மாறல்தகவுச் சேமிப்புகளை பொதுவாக பின்னிடைவான நிலைகளிலேயே கொண்டு காணப்படுவதுடன் தூண்டப்பட்ட விகாரம் குறிப்பிடத்தக்க அளவு புதிய விகாரத்தன்மையை உற்பத்திபண்ணும் என்பதும் சாத்தியமற்றதாகவே காணப்படுகின்றது. மேலும் தூண்டப்பட்ட விகாரம் இலிங்கமில்முறையாக பெருக்கவும் பயிர்த்தாவரங்களின் முன்னேற்றத்துக்கு ஆற்றல்ரீதியாகப் பயனுடையதாகக் காணப்படுகின்றது.

இந்த வரையறைகள் இருந்துங்கூடிய, விகார இனவிருத்தி முயற்சிகள் இன்று உலகம் பூராவும் தொடர்ந்தும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அது பூக்களின் நிறங்கள், வித்துப்பருமன், பயிர் விளைச்சல், நோயெதிர்ப்புத் திறன், உவர் சகிப்புத்திறன், வரட்சி சகிப்புத்திறன் மற்றும் நேரகால முதிர்ச்சி போன்ற உருவவியலுக்குரிய மற்றும் உடற்றொழிலுக்குரிய இயல்புகளை பயிர் மற்றும் அலங்காரத் தாவரங்கள் ஆகிய இரண்டு வகையான தாவரங்களிலும் மேம்படுத்தியுள்ளது. விகார இனவிருத்தியினூடாக உற்பத்திபண்ணப்பட்ட தாவரங்களுள் சோளம், பார்ளி, நெல், உருளைக்கிழங்கு, சோயா அவரை, வெங்காயம் ஆகியன அடங்குகின்றன.

பாரம்பரிய மாற்றியமைப்பு (Genetic modification)
பிறப்புரிமையியல் பொறிமுறை (Genetic engineering) எனவும் அழைக்கப்படும். பாரம்பரிய மாற்றியமைப்பானது, கலங்களின் பிறப்புரிமையியலுக்குரிய கட்டமைப்பை மாற்றுவதற்கு மேற்கொள்ளப்படும் அங்கியொன்றினது பரம்பரையலகுகளின் நேரடிக் கையாளுகையாகும். இந்த முறையில் பிறப்புரிமைக்குரிய பொருள் விரும்பப்படும் இயல்பொன்றைக் காண்பிக்கும் அங்கியொன்றிலிருந்து பெறப்படுகின்றது. பின்னர் அது மீளச்சேர்க்கை DNA தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி (Recombinant DNA Tecnology) இன்னொரு இரண்டாவது அங்கியொன்றினுள் புகுத்தப்படுவதால், பெறுகின்ற அங்கியும் விரும்பப்பட்ட அதே இயல்பினைக் காட்டக்கூடியதாகின்றது. இவ்வாறு இனங்களுக்கிடையேயும் இனங்களுக்குக் குறுக்கேயும் பரம்பரையலகுகள் மாற்றீடுசெய்யப்படுதல் மேம்படுத்தப்பட்ட அல்லது புதிய வகை அங்கிகளைத் தோற்றுவிக்கின்றது.

பாரம்பரிய இனவிருத்தி நுட்பங்களில் பரம்பரை அலகுகளை மாற்றீடு செய்தல் நெருங்கிய இனங்களுக்கு அல்லது சாதிகளுக்கே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக daffofil தாவரத்திலிருந்து விரும்பப்பட்ட ஒரு பரம்பரையலகை நெற்றாவரத்தினுள் செலுத்துவதற்கு பாரம்பரிய இனவிருத்தி நுட்பங்களை பயன்படுத்த முடியவில்லை. நெற்றாவரத்தக்கும் daffodil தாவரத்துக்கும் இடையிலான அனேக இடைப்பட்ட இனங்களும் அவற்றின் பொது மூதாதையர்களும் இனமிழந்து விட்டதே இதற்குக் காரணமாகும். எவ்வாறெனினும், பிறப்புரிமையியற் பொறிமுறையினூடாக அத்தகைய பரம்பரையலகு மாற்றீடு மிகவும் வேகமாக கூடியளவு தனித்துவமுடையதாகவும் இடைப்பட்ட இனங்களின் தேவையின்றியும் மேற்கொள்ளப்படக்கூடியனவாக உள்ளன. வேறொரு அங்கியிலிருந்து பெற்ற ஒரு பரம்பரையலகை வெளிப்படுத்துவதற்கு பொறிமுறைக்குட்படுத்தப்பட்ட அங்கியை விபரிப்பதற்கு பாரம்பரிய மாற்றியமைப்புச் செய்யப்பட்ட அல்லது பிறப்புரிமையியல் ரீதியில் மாற்றியமைப்புச் செய்யப்பட்ட அங்கி (GMO/ Genetically Modified Organism) என்னும் பதம் பயன்படுத்தப்படுகின்றது. உலகப்பட்டினி மற்றும் சுவட்டு எரிபொருளில் தங்கியுள்ளமை போன்றவை அடங்கலாக 21ம் நூற்றாண்டின் நெருக்குதலுக்குரிய சில பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தாவரப் பயிர்களின் பிறப்புரிமையியல் தொழில்நுட்டமே திறவுகோலாகும் என தாவர உயிரியல் தொழில்நுட்டபத்துக்காகப் பரிந்துரை செய்வோர் நம்புகின்றனர். வளையப்புள்ளி (Ring spot) வைரசுக்கு எதிர்ப்புத்தன்மை கொண்ட பப்பாசி, பீற்றா கரட்டினை மிகையாகக் கொண்டதும் உவர் சகிப்புத்தன்மை கொண்டதுமான "தங்க அரிசி" போன்றவை பாரம்பரிய மாற்றீசெய்யப்பட்ட தாவர பேதங்களுக்கு உதாரணங்களாகும்.

இயற்கையான மற்றும் செயற்கையான இனவிருத்தி (Natural and artificial breeding): அனுகூலங்களும் பிரதிகூலங்களும்
செயற்கையான இனவிருத்தி இன்று குறிப்பிடத்தக்க பொருளாதார இலாபங்களுடன் விரிவான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தாலும், இயற்கையான இனவிருத்தியுடன் ஒப்பிடும்பொழுது இம் முறையில் பல பின்னிடைவுகள் காணப்படுகின்றன. செயற்கையான இனவிருத்தி மனிதர்களுக்கு விருப்பமான இயல்புகளைக் கொண்ட தாவரங்கள் அல்லது விலங்குகளின் ஒருசீரான கூட்டம் ஒன்று உற்பத்திபண்ணப்படுதலை நோக்கி உந்தப்படுகின்றது. இனங்களுக்குள்ளான பன்மைத்துவத்துடன் ஒத்துப்போக வேண்டிய தேவை இந்த ஒருசீர்த்தன்மையின் விருத்திக்குத் தேவைப்படுகின்றது. பிறப்புரிமையியல்புக்குரிய பன்மைத்துவக் குறைவு, தொற்றுதலுக்கெதிரான குளைந்தளவு தாங்குதிறன், பிறவிக்குரிய முறைகேடுகள் மற்றும் குறைந்த வளமுடைமை ஆகியவற்றுக்கு இட்டுச் செல்வதன் மூலம் இனத்தின் கூர்ப்புக்கான தகைமையின் மேல் இடர்பாடுள்ள விளைவுகளை ஏற்படுத்தும். உதாரணமாக ஒரே பிறப்புரிமையியலுக்குரிய இயல்புகளைக் கொண்ட விலங்கு அல்லது தாவரக் குடித்தொகையொன்று தாக்குதலுக்குள்ளாகக் கூடிய நோயாக்கியொன்றால் தாக்குதலுக்குள்ளாகும் பொழுது, பரம்பரையலகுத் தடாகத்தினுள்ளே தாக்குதலுக்குரிய இயல்பு காணப்படாததன் காரணமாக முழுக் குடித்தொகையுமே பாதிப்புக்குள்ளாகலாம். குடித்தொகையின் மேல் தாக்கமுறுவதற்கான இயற்கைத் தேர்வுக்குரிய இந்த வரையறுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் மிகவும் தாழ்வானதொரு தகைமை மட்டத்தை நோக்கி அவற்றைச் செலுத்தும் சாத்தியம் உடையன.

மறுகையில் இனத்தின்மேல் தாக்கமுற இயற்கைத் தேர்வை அனுமதிப்பதன் மூலம் தப்பிப்பிழைத்தலைப் பாதிக்கும் பலவீனங்களையும் இயலாமைகளையும் இயற்கையான இனவிருத்தியால் விலக்கிவைக்க முடியும். நீண்ட கால ஓட்டத்தில் இது தகுதியானதும் உறுதியானதுமான தனியன்களை உற்பத்திசெய்யும். எனினும் பிறப்புரிமையியலுக்குரிய தகைமையில் அதிகரிப்பு இருப்பினும், நுகர்வோர் அணுகுமுறையில் இயற்கைத் தேர்வு ஒரு உற்பத்தித்திறன் அதிகரிப்புக்கு உத்தரவாதத்தை அளிக்காது. ஏற்கவே கலந்துரையாடப்பட்டதற்கிணங்க, சில வேளைகளில் உள்ளகவிருத்தி ஓர் செயற்கையான நுட்பமுறையாகவே நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதனால் ஓரினநுகத்தன்மையில் ஓர் அதிகரிப்பை ஏற்படுத்த அது, பல்லினநுகத்தில் மறைக்கப்பட்டுக் காணப்படும் நீக்கப்படவேண்டிய பின்னிடைவான விகாரங்களின் வெளிப்பாட்டை அதிகரிக்கும். இது மொத்தத் தகுதியின் மேல் இடர்பாடுள்ள தாக்கங்களுடன் குடித்தொகையை உள்ளகவிருத்திக் குழிக்குள் செல்ல வைக்கும்.

தொடர்ச்சி பக்கம் 15 ...

பக்க அனுசரணை
NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

தொடர்ச்சி...

## 450ஆவது நாள்...



அவர்கள் கடந்த வருடம் 2018.08.14ஆம் திகதி இப்போராட்டத்தை ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது.
அந்த 450ஆவது நாளில் அங்கு வாழ்ந்த 125குடும்பங்களது காணிகள் முதற்றடவையாக அரச ஏற்பாட்டில் நிலஅளவை செய்யப்படுவதற்காக துப்பரவு செய்யப்படுகிறது.

குறித்த கனகர்கிராம மக்களின் 225 ஏக்கர் காணி அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் டி.எம்.எல்.பண்டாரநாயக்கவின் பணிப்புரையின்பேரில் பொத்துவில் பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜா முன்னிலையில் நிலஅளவை செய்யப்படுகிறது.

நேற்று(7) வியாழக்கிழமை நில அளவை செய்வதற்காக காடு மண்டிக்கிடக்கும் அப்பிரதேசம் டோசர் கனரக இயந்திரம் பாவிக்கப்பட்டு துப்பரவுசெய்யப்படுகிறது. இப்பணி நேற்று(7) பொத்துவில் பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜா முன்னிலையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.
அம்பாறை மாவட்ட நிலஅளவைத் திணைக்களத்தினர் நிலஅளவைக்கான பணிகளை முடுக்கிவிட்டுள்ளனர்.

அம்பாறை அரசாங்க அதிபர் டி.எம்.எல்.பண்டாரநாயக்க, பொத்துவில் பிரதேசசெயலாளர் ஆர்.திரவியராஜா, அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஏ.கே.கோடீஸ்வரன் ஆகியொர் மேற்கொண்ட முயற்சியின் காரணமாக இவ்வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டதாக தெரிகிறது.

அதேவேளை குறித்த 22ஏக்கர் காணியை நேற்றுமுன்தினம் அங்கு அரசஅதிபரின் பணிப்பின்பேரில் சமுகமளித்த வனபரிபாலன இலாகா அடையாளப்படுத்தியுள்ளது.

அக்காணிகளில் நேற்று துப்பரவாக்கும் பணி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. சிலநாட்கள் இப்பணிதொடரும். அதன்பின்பு குறித்த மக்களுக்கு இக்காணி பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக பொத்துவில் பிரதேசசெயலாளர் ஆர்.திரவியராஜா தெரிவித்தார்.
ஜனாதிபதியின் வடக்கு கிழக்கு மாகாண மக்களின் நிலங்களை விடுவிக்கும் வேலைத்திட்டத்தின் ஓரங்கமாக பொத்துவில் கனகர்கிராம மக்களின் காணியும் விடுவிக்கப்படவுள்ளது.

இதுதொடர்பில் அம்பாறை மாவட்ட அரச அதிபர் பண்டாரநாயக்க பொத்துவில் பிரதேசசெயலாளருக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார். உடனடியாக அக்காணியை வனபரிபாலனத் திணைக்களம் மற்றும் நிலஅளவைத்திணைக்களத்துடன் தொடர்புகொண்டு அளந்து அறிக்கை சமாப்பிக்குமாறும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் உத்தரவிட்டுள்ளார்.

அதற்கமைய பொத்துவில் பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜன் மிகவும் துரிதமாகச் செயற்பட்டு 3தினங்களுள் அதற்கான நடவடிக்கையை மேற்கொண்டதன் பலனாக தற்சமயம் காடு வெளியாக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி...

## சொல்லத் துணிந்தேன்!

கண்ணியமாகவும் - வினைத்திறனுடனும் செய்யும் தகுதியும் தராதரமும் அறிவும் ஆற்றலும் ஆளுமையும் அர்ப்பணிப்பும் அணுகுமுறைகளும் தங்களிடம் இல்லையென்றால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசியல் அரங்கிலிருந்து முற்றாக வெளியேறி விடுவதுதானே தர்மம். 'வைக்கோல் பட்டறை நாய்' போலத் தானும் செய்யாமல் செய்பவனையும் செய்யவிடாமல் தடுப்பது அயோக்கியத்தனம் அல்லவா?' என்றெல்லாம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நடுநிலை நிலைப்பாடு பற்றி அரசியல் அவதானிகள் பகிரங்கமாக விமர்சிக்கத் தொடங்கியதும் ஆப்பிழுத்த குரங்கின் நிலைக்கு ஆளாகிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமை தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தை அவசரம் அவசரமாக வவுனியாவில் கூட்டி இவ்வளவு காலமும் பேசிவந்த சுருதியை மாற்றி சஜித் பிரேமதாசாவை ஆதரிக்க முடிவெடுத்து அதனைப் பகிரங்கமாகவும் அறிவித்து அரசியல் 'தகிடுதத்தம்' அடித்துள்ளது. ஒளித்துவைத்திருந்த பூனையை அவிழ்த்துவிடுவதற்கு இவ்வளவு அரசியல் நாடகங்களா? மிகவும் கேவலமான அரசியல் இது.

சஜித் பிரேமதாசாவை ஆதரிப்பதென்ற தமிழரசுக்கட்சியின் முடிவை ஏனைய பங்காளிக்கட்சிகளான 'ரெலோ' மற்றும் 'புளொட்' உடன் கலந்தாலோசித்துப் பின் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் முடிவைத் தலைவர் இரா.சம்மந்தன் மூலம் அறிவிக்கப் போகிறார்களாம்.

2 தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை தமிழரசுக்கட்சியின் தன்னிச்சையான முடிவுதானே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முடிவாகும். 'ரெலோ' உம் மற்றும் 'புளொட்' உம் தமிழரசுக்கட்சி எடுக்கின்ற முடிவுக்குத் 'தலையாட்டிகள்'தானே.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் எத்தனை காலம்தான் தமிழ் மக்களை ஏமாற்றுவார் இந்த நாட்டிலே.

இதுவரை காலமும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் எடுத்த அரசியல் நிலைப்பாடுகள் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான சமூக பொருளாதார அரசியல் நலன்களையும் பெற்றுத் தந்ததில்லை. மாறாக எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தி தமிழ் மக்களை இருந்ததையும் இழக்கப்பண்ணியதுதான் மிச்சம். இந்த அனுபவப் பின்னணியில்தான் தமிழ் மக்கள் தங்கள் அரசியல் தீர்மானங்களைத் தாங்களாகவே எடுக்கவேண்டும்.

ஆகவே, காலத்துக்காலம் தமிழ் மக்களை வஞ்சித்து வாக்குவேட்டையாடும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்குப் பாடம் புகட்டவாவது வடக்கு கிழக்குத் தமிழர்கள் அனைவரினதும் கடமையாகும்.

தொடர்ச்சி...

## கோட்டா ஜனாதிப.....

ஏற்றிருந்தார். இந்த நிலையில் பிரதமர் விவகாரம் குறித்து சஜித் பிரேமதாச கூறிய கருத்தால் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, ராஜித சேனரட்ன, லக்ஸ்மன் கிரியெல்ல ஆகியோர் உள்ளிட்ட மூத்த உறுப்பினர்கள் பலர் ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக நியமிக்க வேண்டுமென வலியுறுத்தி வந்தனர்.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளின்போது இவர்கள் சஜித் பிரேமதாசவுடன் இதுவரை மேடையில் ஏறவில்லை என்றும் தனித்தனியாகவே பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் சஜித் பிரேமதாசவுக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன. இவர்களின் பிரச்சார நடவடிக்கைகளில் தமக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக சஜித் பிரேமதாசவுக்கு நெருக்கமான உறுப்பினர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை, கோட்டாபய வெற்றிபெற்றால் மகிந்த ராஜபக்சவே பிரதமராக நியமிக்கப்படுவாரென ஸ்ரீலங்காப் பொதுஜனப் பெரமுனக் கட்சியின் மூத்த உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்கா நுவரெலியாவில் புதன்கிழமை கூறியிருந்தார். ஆனாலும் பிரதமராக கட்சிக்குள் வேறொருவரை நியமிக்க வேண்டுமெனவும் கருத்துக்கள் நிலவுகின்றன.



எனினும் மகிந்த ராஜபக்சவைப் பிரதமராக நியமிக்க வேண்டும் என்பதே கூட்டுக் கட்சிகளின் நிலைப்பாடு என விமல் வீரவன்ச கூறியுள்ளார். எவ்வாறாயினும் 2016 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட 19 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதியின் சில நிறைவேற்று அதிகாரங்கள் பிரதமருக்கும் நாடாளுமன்றத்திற்கும் பகிரப்பட்டுள்ளன. இதனால் ஜனாதிபதி தன்னிச்சையாக பிரதமரை நியமிக்க முடியாதென்றும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களின் அதிகளவு செல்வாக்குப் பெற்றவரே பிரதமராக நியமிக்கப்பட வேண்டுமெனவும் கூறப்படுகின்றது.

இந்த நிலையில் சஜித் பிரேமதாச ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டாலும் பிரதமர் நியமனம் தொடர்பாக அவரால் தனித்துச் செயற்பட முடியாதென கொழும்பில் உள்ள அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

தொடர்ச்சி...

## கிழக்குத் தமிழர்களின்...

எங்கோ இருந்து கொண்டு இந்த மக்களின் தலைவிதியையும் அரசியல் நடவடிக்கைகளையும் தீர்மானிக்கின்ற ஆதிக்கவாத அரசியல் எம்மிடம் இருந்து களையப்பட வேண்டும். இது தொடர்பாக முன்னாள் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் ஊடகவியலாளர் ஒருவர் வினவியபோது 'எல்லாத் தமிழ்க் கட்சிகளின் மத்திய குழுக்களில் கிழக்கைச் சேர்ந்தவர்கள் இருக்கின்றார்கள் எனவே இது அடிப்படைகளற்ற பிரதேசவாதக் கருத்தாகும் என நிராகரித்திருந்தார். அவரது பேட்டியினை வாசித்த போது. சந்திரிகா அம்மையாரின் ஆட்சிக்காலத்தில் லக்ஸ்மன் கதிர்காமர் வெளிநாட்டு அமைச்சராக பதவி வகித்திருந்தார். இதனால் அது தமிழர்களின் அரசாங்கமாக ஆகிவிடுமா என்ற கேள்வியைத் தவிர்க்க முடியவில்லை. இது ஒன்றை மட்டும் தெளிவாகக் காட்டுகின்றது தங்களுடைய இருப்புக்காக இந்தக் கூட்டமைப்பினர் எப்படியெல்லாம் நியாயப்படுத்தி கிழக்கு மக்களை விலைபேசுகிறார்கள் என்பதேயாகும்.

எனவே எதிர் வரும் சனாதிபதித் தேர்தல் கோதபாய, சஜித் என்பதற்கும் அப்பால் கிழக்கில் யதார்த்த அரசியலை வேண்டி நிற்கும் கிழக்குக் கட்சிகளுக்கும் இலட்சியவாத அரசிலை வேண்டி நிற்கும் வடக்கின் யாழ் மேலாதிக்க கட்சிகளுக்கும் இடையிலான தேர்தலாகவும் இருக்கின்றது. இதில் கிழக்கு மக்கள் தெளிவான முடிவினை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டி ருக்கிறார்கள். அவர்களுடைய முடிவே கிழக்கில் அவர்களுடைய இருப்பை தீர்மானிப்பவையாக இருக்கப்போகின்றது என்பதை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

தொடர்ச்சி...

## விஞ்ஞானம்....

சிலவேளைகளில் செயற்கை இனவிருத்தி எதிர்தன்மையுடன் தொடர்பான தூண்டற்பேறுகளைக் காட்சிப்படுத்தலாம். செயற்கை இனவிருத்தியானது குடித்தொகையில் குறிப்பிட்ட இயல்புகளை ஒரே சமயத்திலும் திட்டமிடாமலும் மேம்படுத்தும் அதேவேளை, அது நேரடி அவதானிப்பின் கீழ் அல்லாத பிற இயல்புகளின் சிதைவை நோக்கியும் இட்டுச் செல்லக் கூடும் என்பதையே இது குறித்து நிற்கின்றது. உதாரணமாக, Power Boxer அல்லது bull dog போன்ற சில நாய் விருத்தி வகைகளில் தலையோட்டின் வடிவம் அவற்றைச் சாதாரண உணவை உண்பதற்குக் கடினமாக ஆக்கியுள்ளது. அவற்றின் மேல்தாடை கீழ்த்தாடையிலும் பார்க்கக் குறுகியதாக இருப்பதே இதற்குரிய காரணமாகும். இதே போன்று பெரிய எச்சங்களுக்கான தேர்வு, குட்டி ஈனுவதில் ஓர் உயர் கடினத்தன்மைப் பின்னைத்தைத் தோற்றுவித்துள்ளது. textel ஆடுகளில் போன்று சில சமயங்களில் அதற்கு அறுவை சிகிச்சை மருத்துவப் பிரசவம் தேவைப்படுகின்றது. Belgiun White மற்றும் Blue cattle போன்ற இறைச்சிக்கான கால்நடை விருத்திவகைகளிலும் மற்றும் Futch Improvef Red – and – White வகைகளிலும் கூட இது ஓர் பொதுவான பிரசவ முறையாக அமைந்துவிட்டது. இந்த மாதிரியான எதிர்மறையான தூண்டற்பேறுகளை நேரகாலத்துடன் எதிர்வு கூறல் கடினமான காரியமாகும். அத்துடன் அது புதிய விருத்தி வகை நிறுவப்பட்ட பின்னரே பொதுவாக தென்படுகின்றது.

செயற்கை இனவிருத்தியானது விலங்கு மற்றும் தாவர மொத்த உற்பத்தியின் மேல் காண்பிக்கும் ஏராளமான அனுகூலங்கள் காரணமாக ஏற்கனவே கலந்துரையாடப்பட்டது போன்று, எதிர்மறையான தாக்கங்கள் காணப்பட்ட போதிலும் செயற்கை இனவிருத்தியே இயற்கை இனவிருத்தியிலும் பார்க்கப் பெரிதும் விரும்பப்படுகின்றது.




Published by Arangam News (Pvt) No 196,Trinco Road, Batticaloa and Printed at Express News Papers (Cey) Ltd